பக்கங்கள் – 16
விலை – ரூபா 50

உதயன்
விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com
077 120 9996
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41
கதிர் : 224

புதன்கிழமை
08 ஜூலை 2026

புதன்பொய்கை

ஆனி 24 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2057

## காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதியை உடன் நிலைநாட்டுக!

### காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சர்வதேச மாநாட்டை நடத்த முடிவு

யாழ்ப்பாணம், ஜூலை 8

காணாமல் ஆக்கப்பட்டோருக்கான நீதியை வலியுறுத்தி, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தை முன்னிட்டு எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 30ஆம் திகதியன்று யாழ்ப்பாணத்தில் சர்வதேச மாநாடொன்றை நடத்தவுள்ளதாக காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தெரிவித்துள்ளனர்.

»15

### நீர்கொழும்புச் சிறையிலிருந்து

## யாழ்ப்பாணச் சிறைக்கு 60 கைதிகள் மாற்றம்!

யாழ்ப்பாணம், ஜூலை 8

நீர்கொழும்பு சிறைச்சாலையில் ஏற்பட்ட வன்முறைச் சம்பவங்களைத் தொடர்ந்து, அங்கிருந்த கைதிகளில் 60 பேர் நேற்று யாழ்ப்பாணம் சிறைச்சாலைக்குக் கொண்டு வரப்பட்டனர்.

நீர்கொழும்பு சிறைச்சாலையில் கடந்த இரண்டு தினங்களாகக் கைதிகளுக்கு இடையில் இடம்பெற்ற மோதல்களில் சிறைக் காவலர்கள்

»15

## சிறைக் கலவரத்தால் நாட்டுக்குக் களங்கம்



### ஜி.எல்.பீரிஸ் அதிருப்தி

கொழும்பு, ஜூலை 8

நீர்கொழும்பு சிறைச்சாலையில் ஏற்பட்டுள்ள சம்பவத்தால் இலங்கையின் நற்பெயருக்குக் களங்கம் ஏற்பட்டுள்ளது என்று முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

»15

## அரசியல் தேவைக்காகவே கொல்லப்பட்டார் குட்டிமணி

### அமைச்சர் பிமல் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 8

அரசியல் தேவைக்காகவே அன்று சிறைச்சாலைக்குள் குட்டிமணி உள்ளிட்டவர்கள் படுகொலை செய்யப்பட்டனர் - இவ்வாறு அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று அவர் தெரிவித்ததாவது:-

1983ஆம் ஆண்டு

»15

### ரயில் பெட்டிகள் பற்றாக்குறை

## காங்கேசன் - கொழும்பு ரயில்சேவை மட்டுப்பாடு

யாழ்ப்பாணம், ஜூலை 8

போதியளவு ரயில் பெட்டிகள் இன்மையால், தற்போது நாளாந்தம் இயக்கப்பட்டுவரும் கொழும்பு கோட்டை - காங்கேசன்துறை இடையிலான ரயில் சேவைகள்வாரத்தில்நான்கு நாள்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக ரயில்வேத் திணைக்களம் அறிவித்

»15

## ஜி.எஸ்.பி. சலுகை ரத்தாகும்ஆபத்து!

### தயாசிறி ஜயசேகர தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 8

நீர்கொழும்பு சிறைச்சாலையில் ஏற்பட்ட கலவரம் சர்வதேசம் வரை சென்றுவிட்டது. எனவே, முறையான விசாரணைகள் இடம்பெறாவிட்டால் ஜி.எஸ்.பி. வரிச்சலுகைகள் கிடைக்காமல் போகும் ஆபத்து உள்ளது இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.அவர் மேலும் தெரிவித்ததாவது:-

»15

### பலாலி இராஜேஸ்வரி ஆலயத்தின்

## பாதையை விடுவிப்பதற்கு இணங்கியது இராணுவம்!



### இளங்குமரன் எம்.பி.யிடம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 8

பலாலி இராஜேஸ்வரி அம்மன் ஆலயப் பாதையை பொதுமக்களின் பாவனைக்காக பகுதியளவில் விடுவிப்பதற்கு இராணுவம் இணக்கம் வெளியிட்டுள்ளது.

பலாலி இராஜேஸ்வரி அம்மன் ஆலயம் 35 வருடங்களுக்குப் பின்னர் கடந்த வருடம் விடுவிக்கப்பட்டது. ஆரம்பத்தில் மாதத்தில் சில

»15

**டெங்கு 62,000**

விரிவு
பக்கம்:-05

### மருதங்கேணியில்

## காணி சுவீகரிப்பை எதிர்த்து போராடுவதற்கு அணிதிரள்க!

### காணி உரிமைக்கான அமைப்பு அழைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 8

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு மருதங்கேணிப் பகுதி யில் தனியாருக்குச் சொந்தமான 25 ஏக்கர் காணிகளைச் சுவீகரிப்பதற்கான நடவடிக்கை நாளை இடம்பெறவுள்ள நிலையில், அதைத் தடுக்க அணிதிரளுமாறு வடமாகாணக் காணி உரிமைக்கான மக்கள் இயக்கத்தின் தலைவர் இ.முரளிதரன் அழைப்பு விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மருதங்கேணியில் மிகப் பெரிய காணிச் சுவீகரிப்பு நடவடிக்கையை

»15

## எரிபொருள் கட்டுப்பாடு நீக்கப்பட்டது நேற்று!

கொழும்பு, ஜூலை 8

மத்திய கிழக்கில் ஏற்பட்ட போர்ப் பதற்றத்தைத் தொடர்ந்து அரச அதிகாரிகளுக்கு விதிக்கப்பட்ட எரிபொருள் விநியோகக் கட்டுப்பாடுகள் அனைத்தும் நீக்கப்பட்டுள்ளன.

மத்திய கிழக்கில் நிலவிய போர் காரணமாக கடந்த ஏப்ரல் மாதம் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரச அதிகாரிகளுக்கு எரிபொருள் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்தன. அத்துடன், எரிபொருள் கொடுப்பனவுகள் மார்ச் முதலாம் திகதி நிலவிய விலையின் அடிப்படையில் வழங்

»15




“சண்டை முடிஞ்ச பிறகும் எதுக்கு இப்பிடி ஆமிக்கு கள்ளக்காணி பிடிச்சுக் குடுக்கினம் எண்டு விளங்கேல கண்டியளோ”

முச்சந்தி முரளி

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# 7 அத்தியாவசிய தேவைகளுக்கு 'ரின்' இலக்கம் இனிக் கட்டாயம்

## யாழ்.பிராந்திய ஆணையாளர் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம்,ஜூலை 8**

**உள்நாட்டு இறைவரித் திருத்தச் சட்டத்துக்கு அமைவாக, வரி செலுத்துநர் அடையாள இலக்கம் வங்கிக் கணக்கைத் திறத்தல், கட்டடத் திட்டத்துக்கான ஒப்புதலைப் பெற்றுக்கொள்ளல், மோட்டார் வாகனத்தின் பதிவு, மோட்டார் வாகன உரிமம் புதுப்பித்தல், நிலத்தின் பதிவு அல்லது நிலத்தின் உரிமை மாற்றம், இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட ஒரு நிறுவனத்தின் பங்குகளை மாற்றுதல், கிரெடிட் கார்ட்டைப் பெற்றுக்கொள்ளல் உள்ளிட்ட 7 விடயங்களுக்கு இனி அத்தியாவசியமானது என்று உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் யாழ். பிராந்திய ஆணையாளர் ஏ.பி.குணதுங்க தெரிவித்துள்ளார்.**

பிராந்திய ஆணையாளர் ஏ.பி.குணதுங்க, யாழ்.மாவட்டச் செயலர் ம.பிரதீபனை அவரது அலுவலகத்தில் நேற்றுமுன் தினம் சந்தித்துக் கலந்துரையாடிய போது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், 2334/21ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைவாக, 18 வயதுக்கு மேற்பட்டவர்கள் கட்டாயமாக வரி செலுத்துநர் அடையாள இலக்கத்தை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் பதிவுசெய்து பெற்றுக்கொள்ள வேண்டும். பதிவுசெய்திருப்பின் கியூ.ஆர். குறியீட்டைப் பயன்படுத்தி அல்லது உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் இணையத்தளத்தில் IRD பதிவுச் சான்றிதழைச் சரிபார்க்கவும் என்ற இணைப்பினூடாக மின்னஞ்சல் அல்லது தொலைபேசிக்கு OTP இலக்கத்தைப் பெற்று, வரி செலுத்துநர் அடையாள இலக்கத்தைப் பார்வையிட முடியும். வரி செலுத்துநர் அடையாள இலக்கம் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டிருக்காவிடின், நிகழ்நிலை முறைமை மூலமாக (www.ird.gov.lk) அல்லது உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் உரிய விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்திசெய்து சமர்ப்பிப்பதன் மூலமாகவோ பெற்றுக்கொள்ள முடியும். தற்போது பதிவுகளை மேற்கொள் பவர்களுக்கான வரி செலுத்துநர் அடையாள இலக்கச் சான்றிதழ் தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும்- என்றார். (க-66-27)

### சுபிரி தன சம்பத

| திகதி | தினம் | வெற்றி வாரம் |
|---|---|---|
| 07.07.2026 | செவ்வாய்க்கிழமை | 0949 |

| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|
| T | 2 6 8 9 2 7 |

### Super Ball DLB

| திகதி | தினம் |
|---|---|
| 07.07.2026 | செவ்வாய்க்கிழமை |

| சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|---|
| 3215 | U | 38 42 53 68 |

### சனிதா DLB

| திகதி | தினம் |
|---|---|
| 07.07.2026 | செவ்வாய்க்கிழமை |

| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|
| V | 26 30 38 50 | 5376 |

### SASIRI DLB

| திகதி | தினம் |
|---|---|
| 07.07.2026 | செவ்வாய்க்கிழமை |

| வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் |
|---|---|
| 1045 | 03 10 36 |

### லக்ன ராசி DLB

| திகதி | தினம் |
|---|---|
| 07.07.2026 | செவ்வாய்க்கிழமை |

| ரிஷபம் | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
|---|---|---|
| | 09 26 31 48 | 4927 |

### KAPRUKA DLB

| திகதி | தினம் |
|---|---|
| 07.07.2026 | செவ்வாய்க்கிழமை |

| ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|
| B | 04 | 10 40 47 62 | 2391 |

### அத கோடிபதி DLB

| திகதி | தினம் |
|---|---|
| 07.07.2026 | செவ்வாய்க்கிழமை |

| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|
| Z | 21 36 53 56 | 3041 |

நெடுந்தீவு சுற்றுலாவிகளுக்கு

# தங்குமிடம் வழங்குவோருக்கு இலகு கடன் வசதித் திட்டம்!


யாழ்ப்பாணம்,ஜூலை 8

நெடுந்தீவுக்கு வருகைதரும் சுற்றுலாப் பயணிகளுக்கான தங்குமிட வசதி வழங்கும் தொழிலை மேற்கொண்டு வருபவர்கள் மற்றும் புதிதாகத் தொழிலை ஆரம்பிக்க இருப்பவர்களுக்கு உதவி வழங்கல் மற்றும் இலகு கடன் வசதியை வழங்கும் வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

நெடுந்தீவு பிரதேசசபையில், வடக்கு மாகாண சுற்றுலாத்துறை பணியகத்தின் தலைவரால் நடத்தப்பட்ட கலந்துரையாடலுக்கு அமைவாக இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

எனவே சுற்றுலாப் பயணிகளுக்கு தங்குமிட வசதி வழங்குவோர் மற்றும் புதிதாக வழங்கவுள்ளோர் எதிர்வரும் 12ஆம் திகதிக்கு முன்னர் நெடுந்தீவு பிரதேச சபையில் தங்களது விவரங்களைப் பதிவுசெய்ய முடியும்.

சுற்றுலாப் பணியகத்தினரால் தொழிலின் தற்போதைய நிலைமை தொடர்பாக நேரடியாக களஆய்வு செய்யப்பட்ட பின்னர், உதவி வழங்கல் மற்றும் இலகு கடன் வசதியை வழங்கும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படும் என்று பிரதேசசபையினர் தெரிவித்துள்ளனர். (க)



# பேரவைக் குழுவினர் சீமானுடன் சந்திப்பு

புதுடில்லி,ஜூலை 8

இந்தியா பயணித்துள்ள தமிழ்த்தேசியப் பேரவைக் குழுவினர், நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமானை, நீலாங்கரையில் உள்ள அவரது இல்லத்தில் கடந்த சனிக்கிழமை சந்தித்தனர். இந்தச் சந்திப்பில், இலங்கையில் ஒற்றையாட்சி அரசியலமைப்பு முறைமை அடியுடன் ஒழிக்கப்பட்டுத் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய தமிழர்தேசம், இறைமை, சுயநிர்ணய உரிமை அடிப்படையிலான சமஷ்டி அரசியல் தீர்வு உருவாக்கப்பட தமிழ்நாட்டிலுள்ள ஏனைய அரசியல் கட்சிகளுடன் இணைந்து, இந்திய மத்திய அரசின் ஊடாக இலங்கை அரசின் மீது உரிய அரசியல் அழுத்தத்தை ஏற்படுத்துவதற்கு முன்முயற்சி எடுக்கவேண்டுமெனக் கோரினர். அத்துடன் தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்டுள்ள போர்க் குற்றங்கள், மனிதகுலத்துக்கு எதிரான குற்றங்கள் மற்றும் இன அழிப்புக் குற்றச்சாட்டுகள் தொடர்பாக சர்வதேச சுயாதீன குற்றவியல் விசாரணை முன்னெடுக்கப்படுவதற்கு, இந்தியா ஒத்துழைப்பு வழங்கவேண்டியதன் அவசியம். அதற்காகத் தமிழகத்திலுள்ள கட்சிகளை ஒன்றிணைத்துச் செயற்பட வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தனர். (க-66)

# அதிகாரிகள் பழிவாங்கப்பட்டதே சிறை வன்முறைக்குக் காரணம்!

## கூறுகிறார் திலித் எம்.பி.



கொழும்பு, ஜூலை 8

தற்போதைய அநுர அரசாங்கத்தின் திட்டமிடப்படாத மற்றும் தொலைநோக்கற்ற தன்னிச்சையான நடவடிக்கைகளே நீர்கொழும்பு சிறைச்சாலையில் கைதிகளுக்கு இடையே ஏற்பட்ட வன்முறை மோதலுக்கு முதன்மைக் காரணமாகும் என்று சர்வஜன அதிகாரத்தின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான திலித் ஜயவீர தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இதுபோன்ற தேசிய பாதுகாப்புடன் தொடர்புடைய விவகாரங்களில் தற்போதைய அரசு குறுகிய அரசியல் நோக்கங்களைக் கைவிடவேண்டும். சிறைச்சாலை நிர்வாகத்தில் நீண்ட அனுபவமிக்கவரான முன்னாள் சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் துஷார உபுல்தெனிய, தற்போதைய அரசினால் தன்னிச்சையான முறையில் பதவியிலிருந்து நீக்கப்பட்டார். தகுதியான அதிகாரிகளை நீக்கிவிட்டு நிர்வாகத்தைச் சீர்குலைத்த இதுபோன்ற தவறான முடிவுகளே, இன்று சிறைகளுக்குள் பாதாள உலகக் கும்பல்கள் தைரியமாக வன்முறையில் ஈடுபடும் இக்கட்டான சூழ்நிலையை உருவாக்கியுள்ளது - என்றார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# நீர்கொழும்பு சிறைச்சாலைக்குள் பாதாள உலகக் கும்பலே அட்டகாசம்!

## நீதியமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 8

**நீர்கொழும்பு சிறைச்சாலையில் கைதிகளுக்கு இடையே அண்மையில் ஏற்பட்ட வன்முறை மோதலானது, பாதாள உலகக் கும்பல்கள் மற்றும் போதைப்பொருள் கடத்தல்காரர்களுக்கு இடையே திட்டமிட்டு நடத்தப்பட்ட ஒரு நேரடி மோதலாகும் என்று நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த மோதலானது தற்செயலாக ஏற்பட்டது அல்ல, மாறாக சிறைச்சாலைக்குள் தங்களது சட்டவிரோதப் போதைப்பொருள் ஆதிக்கத்தை நிலைநிறுத்த முன்கூட்டியே திட்டமிட்டு அரங்கேற்றப்பட்ட ஒரு சம்பவமாகும். கைதிகளில் ஒரு தரப்பினர் மோதலை ஆரம்பிப்பதற்கு முன்னதாக, சிறைச்சாலைக்குள் தங்களின் முக அடையாளங்கள் பதிவாவதைத் தடுப்பதற்காக அங்கிருந்த சி.சி.ரி.வி. கமராக்கள் மற்றும் சிறைக்குள் போதைப்பொருள் கடத்தப்படுவதைக் கண்டறியும் அதிநவீன போதைப் பொருள் ஆராய்வு ஸ்கேன் இயந்திரங்களை அடித்து நொறுக்கி நாசப்படுத்தியுள்ளனர்.

இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து இதுபோன்ற வன்முறைச் சம்பவங்கள் நாட்டின் ஏனைய பிரதான சிறைச்சாலைகளிலும் பரவாமல் தடுக்கும் வகையில், நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்துச் சிறைச்சாலைகளினதும் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டு, விசேட அதிரடிப்படையினர் மற்றும் உளவுத்துறையினர் கண்காணிப்பில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்- என்றார். (ச-இ)

## சஷீந்திர ராஜபக்ச மீது குற்றப்பத்திரிகை தாக்கல்

கொழும்பு, ஜூலை 8

ஊழல் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ள முன்னாள் இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக்ச உள்ளிட்ட மூன்று பிரதிவாதிகளுக்கு எதிராக, கொழும்பு மேல் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவினால் தாக்கல் செய்யப்பட்ட இந்தக் குற்றப்பத்திரிகை, கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ரவீந்திர பிரேமரத்ன முன்னிலையில் கையளிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து, தலா பத்து இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளில் பிரதிவாதிகளை விடுதலை செய்த நீதிபதி, அவர்களுக்கான வெளிநாட்டுப் பயணத் தடையையும் விதித்தார். இந்த வழக்கை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 5ஆம் திகதி விசாரணைக்கு முந்தைய கலந்தாய்வுக்காக அழைக்குமாறும் உத்தரவிட்டார். (ச-இ)

## நீர்கொழும்பு சிறைச்சாலைக் கலவரம் ம.உ.ஆணைக்குழுவால் விசாரணை

நீர்கொழும்பு, ஜூலை 8

நீர்கொழும்பு சிறைச்சாலையில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் விசேட விசாரணை ஒன்றை நடத்துவதற்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது என்று மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர் நிமல் ஜி. புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார். இதற்கமைய நீர்கொழும்பு சிறைச்சாலைக்கு தமது அதிகாரிகள் குழுவொன்றை அனுப்பிய போதிலும், அங்கு நிலவிய அமைதியற்ற சூழல் காரணமாக விசாரணைகளை ஆரம்பிக்க முடியாமல் போயுள்ளது. எனினும் எதிர்வரும் சில நாள்களில் நீர்கொழும்பு சிறைச்சாலைக்குச் சென்று குறித்த சம்பவம் தொடர்பான முழுமையான விசாரணைகளை ஆரம்பிக்கவுள்ளோம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)



## கால்நடைத் தீவனத்துக்கு அரிசி, நெல் பயன்பாடு

கொழும்பு, ஜூலை 8

அரிசி அல்லது நெல்லை கால்நடைத் தீவன உற்பத்திக்காகப் பயன்படுத்துவதைத் தடைசெய்து முன்னதாக வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

இதுகுறித்த அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலை நுகர்வோர் விவகார அதிகாரசபை தற்போது வெளியிட்டுள்ளது. இதன்படி, அரிசி அல்லது நெல்லை கால்நடைத் தீவன உற்பத்திக்காக நேரடியாகப் பயன்படுத்துவதற்கோ, விற்பனைக்காக காட்சிப்படுத்துவதற்கோ, களஞ்சியப் படுத்துவதற்கோ, கொண்டு செல்வதற்கோ, அல்லது கொள்வனவு செய்வதற்கோ மீண்டும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று நுகர்வோர் விவகார அதிகாரசபை தெரிவித்துள்ளது. (ச-இ)

## நாட்டின் பாதுகாப்புக்கு முப்படையினர் அழைப்பு

கொழும்பு, ஜூலை 8

நாட்டின் பொது அமைதியைப் பேணிப் பாதுகாப்பதற்காக, முப்படைகளின் அனைத்து உறுப்பினர்களையும் குறிப்பிட்ட பிரதேசங்களில் விசேட கடமைகளில் ஈடுபடுத்துமாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க பிறப்பித்துள்ள அவசர உத்தரவை சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன இன்று நாடாளுமன்றத்துக்கு அறிவித்துள்ளார். பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டத்தின் 12ஆம் பிரிவின் மூலம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள விசேட அதிகாரங்களின் பிரகாரமே, நாட்டின் பொது அமைதியைப் பாதுகாப்பதற்காக இந்த விசேட பிரகடனம் பிறப்பிக்கப்பட்டுள்ளதாக சபாநாயகர் சபைக்குத் தெரிவித்தார்.




## 'கப்பு' முக்கியமா?

இண்டைக்கு பட்சி திருநெல்வேலியில இருக்கிற 'அம்மாச்சி' கடைக்குச் சாப்பிடப் போன ஒருத்தர் தன்ர பேஸ்புக்கில போட்ட அனுபவத்தைச் சொல்லப் போகுது. அவருக்கு அம்மாச்சி உணவகம் எண்டாலே அப்பிடியொரு விருப்பம். ஏனெண்டால், அங்க வீட்டுச் சாப்பாட்டின்ர ருசியில சத்தான, பாரம்பரியமான சாப்பாடுகள் எல்லாம் கிடைக்கும். அதைவிட முக்கியமா பிளாஸ்ரிக் பாவனையை ஏலுமட்டும் குறைச்சு, வாழையிலையைத் தான் கூடப் பாவிக்கினம். அண்டைக்கும் அவர் அம்மாச்சிக்குப் போய், வழக்கம் போல ஒரு இலைக்கஞ்சி வாங்கிப் போட்டு, காசைக் குடுக்கிறதுக்காக 'என்ன விலை?' எண்டு கேட்டிருக்கிறார். முந்தி அவை இலைக்கஞ்சிக்கு வாங்கின காசை விட இப்ப இருபது ரூபா கூடவாச் சொல்லியிருக்கினம்.

'ஏனக்கா இப்ப திடீரெண்டு இருபது ரூபா கூட்டிப்போட்டியள்?' எண்டு அவர் கேட்டிருக்கிறார். அதுக்கு அந்த அக்கா இப்ப நாங்கள் கண்ணாடிக் கிளாஸில கஞ்சி குடுக்கிறேலை, ஒரு தரம் மட்டும் பாவிச்சுத் தூக்கிப்போடுற 'பேப்பர் கப்' ல தான் குடுக்கிறம், அந்தப் பேப்பர் கப்புக்காகத் தான் இப்பிடி இருபது ரூபா கூட்டியிருக்கிறம்' எண்டு சொல்லியிருக்கிறா. கண்ணாடிக் கிளாஸில குடுத்தால் என்ன? எண்டு இவரும் துருவிக்கேக்க, அதுக்கு அவர் சொன்ன கதைதான் பெரும் முசுப்பாத்தி! கொஞ்ச நாளைக்கு முன்னால ஏதோ சுகாதாரப் பிரச்சினை எண்டு அம்மாச்சியை பி.எச்.ஐ.மார் மூடினவை. திரும்பத் திறக்கேக்க கண்ணாடிக் கிளாஸ் பாவிக்கக் கூடாது. ஒரு தரம் பாவிச்சுத் தூக்கிப்போடுற பேப்பர் கப்புகளைத் தான் பாவிக்கோணும் எண்டு ஒரு 'விசித்திரமான' கட்டளையைப் பி.எச்.ஐ.மார் போட்டிருக்கினம். அதுக்குப் பிறகு தான் அங்க பேப்பர் கப் பாவனையாம்.

ஒரு தரம் பாவிச்சுட்டுக் குப்பையில வீசுற 'பேப்பர் கப்' உண்மையிலேயே சுகாதாரமானதோ? இல்லாட்டி, முறையாச் சுத்தம் செய்து சுடுதண்ணியில கழுவித் திரும்பப் பாவிக்கிற கண்ணாடிக் கிளாஸ் சுகாதாரமானதோ? ஒருநாளைக்கு திருநெல்வேலி அம்மாச்சியில தேத்தண்ணி, கஞ்சி, ஜூஸ் எண்டு 1,000 முதல் 2,000 கப்புகள் வரை பாவிக்கினமாம். அப்பிடியெண்டால், ஒரு நாளைக்கு ஆயிரக்கணக்கான கப்புகள் குப்பையா போகுது!

பொருளாதார ரீதியா யோசிச்சாலும் ஒரு கப்புக்கு 20 ரூபா மேலதிகமா வாங்கினா, 2,000 கப்புக்கு ஒரு நாளைக்கு 40,000 ரூபா சனத்தின்ர காசு வீணாப் போகுது. இந்த 40,000 ரூபாவில கிளாஸை சுடுதண்ணியில கழுவிறதுக்கு மிஷினை வாங்கியிருக்கலாம். இல்லாட்டி ஒரு நாள் பேப்பர் கப்புக்கு செலவழிக்கிற காசை மாதச் சம்பளமாக் குடுத்தாலே கிளாஸை சுடுதண்ணியில கழுவ எண்டு தனியா ஒராளை வேலைக்கு வைச்சிருக்கலாம். வேலையில்லாத ஒராளுக்கு வேலையும் கிடைக்கும். அதோட மாதம் 12 லட்சம் ரூபாவை அம்மாச்சிக்காரர் சேமிக்கவும் முடியும். அதைவிட்டிட்டு பேப்பர் கப் செய்யிறவைக்கெல்லோ உந்த பி.எச்.ஐ.மார் உழைப்புக் காட்டியிருக்கினம்.

பொதுச் சுகாதாரம் எண்டது சனம் சாப்பிடுற மேசையோடயோ, குடிக்கிற கிளாஸோடையோ முடியுற விசயமில்லை. அது குப்பை மேலாண்மை, சுற்றுச்சூழல் பாதுகாப்பு எண்டு எல்லாத்தையும் உள்ளடக்கினது. எங்கட கல்வி முறையும் சமூகமும் இப்பிடித்தான் ஒரு அதிகாரி ஒண்டச் சொன்னா, அது பிழையா இருந்தாலும் ஆராயாம தலையாட்டிற நிலைமைதான் எங்களிட்ட இருக்கு. சிந்திச்சு கேள்வி கேக்கிற சமூகம் இருந்தால்தான் நிலையான தீர்வு கிடைக்கும் கண்டியளோ!

padsi@uthayan.com
-பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media







# மனித உரிமைகள் மாநாடு

கொழும்பு, ஜூலை 8

2026ஆம் ஆண்டுக்கான மனித உரிமைகள் தலைமைத்துவ மாநாடு கொழும்பில் அண்மையில் நடைபெற்றது.

மனித உரிமைகள் அபிவிருத்திக்கான சர்வதேச குரல் மற்றும் சர்வதேச தூதரக நிறுவனம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் இந்த மாநாடு நடைபெற்றது.

இந்த மாநாட்டில் ஏ.எச்.சி. குழுமத்தின் தலைவர் கலாநிதி நாலக சில்வா, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கட்சியின் தலைவர் செந்தில் தொண்டைமான், மனித உரிமைகள் அபிவிருத்திக்கான சர்வதேச குரல் அமைப்பின் பிரதிநிதி ரகு இந்திரகுமார், சர்வதேச கிரிக்கெட் நடுவர் குமார் தர்மசேன உள்ளிட்டவர்கள் கலந்துகொண்டனர். (க)

# உதைபந்தாட்டப் போட்டியின் அரையிறுதி ஆட்டங்கள் இன்று

யாழ்ப்பாணம்,ஜூலை 8

வடமராட்சிசிரேஷ்ட சங்கத்தின் அனுமதியுடன், அபிராமி இரும்பக அனுசரணையுடன் க.சொக்கன் ( சசிகுமார் ) ஞாபகார்த்தமாக பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்தும், 40 வயதுக்கு மேற்பட்டோருக்கான உதைபந்தாட்டப் போட்டியின் அரையிறுதி ஆட்டங்கள் இன்று புதன்கிழமை கழக மைதானத்தில் நடைபெறவுள்ளன.

இன்றைய தினம் பிற்பகல் 4 மணிக்கு இடம்பெறும் முதலாவது அரையிறுதிப் போட்டியில் வல்வை அணியை எதிர்த்து, கொலின்ஸ் அணியும், பிற்பகல் 5 மணிக்கு இடம்பெறும் இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் பருத்தித்துறை ஐக்கிய அணியை எதிர்த்து கொற்றாவத்தை றேஞ்சஸ் அணியும் மோதவுள்ளன. (க-422)

# மணவாளக்கோலம்

யாழ்ப்பாணம், ஜூலை 8

வரலாற்றுச் சிறப்புமிக்க பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலய மகா கும்பாபிஷேக தின மணவாளக்கோலத் திருவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

காலை 1008 கலசாபிஷேகத்தைத் தொடர்ந்து மகாயாக கும்ப உற்சவம், மகாகும்ப அபிஷேகம், விசேட பூஜை என்பன இடம்பெற்றன. மாலை வசந்தமண்டப் பூஜையைத் தொடர்ந்து அழகிய பூந்தண்டிகையில் ஸ்ரீதேவி, பூமிதேவி சமேதராக வரதராஜப் பெருமாள் அடியவர்கள் புடைசூழ உள்வீதி, வெளிவீதி உலா வரும் திருக்காட்சி இடம்பெற்றது.(ச-41-66)



# நூல் வெளியீடு

யாழ்ப்பாணம்,ஜூலை 8

முனைவர் ச.மனோன்மணி மற்றும் திருமதி அமுதா அன்பழகன் ஆகியோர் இணைந்து எழுதிய 'தமிழர் வாழ்வியலில் பனை' எனும் நூலின் வெளியீட்டு விழா நாளை வியாழக்கிழமை மாலை 3.30 மணிக்கு, யாழ்.பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

யோ.நிவேதன் தலைமையில் இடம்பெறும் நிகழ்வில், யாழ். பல்கலைக்கழக உயர் பட்டப்படிப்புகள் பீடப் பீடாதிபதி பேராசியர் பூ. ஐங்கரன் நூலை வெளியிட்டு வைப்பார்.

நூலின் வெளியீட்டு உரையை நல்லூர்ப் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் கு. றஜீபன் ஆற்றுவார். (க)

# ஆண்டு விழாவும் பாலர் தினமும்

யாழ்ப்பாணம்,ஜூலை 8

வல்வை நெடியகாடு கணபதி படிப்பகத்தின் 59ஆவது ஆண்டு விழாவும், பாலர் தினமும் எதிர்வரும் 12ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5.30 மணிக்கு, நெடியகாடு திருச்சிற்றம்பலப் பிள்ளையார் ஆலய வீதியில் நடைபெறவுள்ளது.

கணபதி படிப்பகத் தலைவர் சி.மதுசூதனன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில், பிரதம விருந்தினராக சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி வசிகரன் ஸ்ரீஜீவராணி கலந்து கொள்வார். (க-100)

# இன்றைய ராசி உங்களுக்கு எப்படி?

**மேடம்:** தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். புதிய முயற்சிகள் சாதகமாகமுடியும். எதிர்பாராத செலவுகள் அதிகரித்தாலும் சமாளித்துவிடுவீர்கள். குடும்பத்தில்வாழ்க்கைத்துணைவழிஉறவினர்களால் மகிழ்ச்சி ஏற்படும்.

**இடபம்:** உடல் ஆரோக்கியம் மேம்படும். சிலருக்கு திடீர்ப் பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. எதிரிகள் வகையில்ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாகமுடியும். முக்கியமான பிரமுகர்களின் தொடர்பு கிடைக்கும்.

**மிதுனம்:** சகோதரர்களின் ஆதரவு உற்சாகம் தரும். தந்தைவழியில் திடீர் செலவுகள் ஏற்படக் கூடும். புதிய முயற்சி அனுகூலமாக முடியும். கணவன் – மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**கடகம்** தாய்வழியில் எதிர்பார்த்த காரியம் இழுபறியாகமுடியும். அதிகாரிகளின் சந்திப்பும் அதனால் காரியங்களில் வெற்றியும் உண்டாகும். புதிய முயற்சியைக் காலையிலேயே தொடங்குவது நல்லது.

**சிம்மம்** இன்று எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்கவேண்டியது அவசியம். புதிய முயற்சியைக் கண்டிப்பாகத் தவிர்க்கவும். மற்றவர்களுடன் பேசும்போது வீண்மனஸ்தாபம் ஏற்படும் என்பதால், வார்த்தைகளில் நிதானம் தேவை.

**கன்னி:** புதிய முயற்சி சாதகமாகமுடியும். அரசாங்க வகையில் எதிர்பார்த்த காரியம், வீண் அலைச்சலையும் செலவுகளையும் கொடுத்தாலும், சாதகமாக முடிந்துவிடும்.

**துலாம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். தந்தைவழி உறவினர்களுக்காக செலவு செய்யவேண்டி வரும்.

**விருச்சிகம்:** எதிர்பார்த்த பணம் வந்தாலும் எதிர்பாராத செலவுகளும் ஏற்படும். கூடியவரை இன்று புதிய முயற்சி எதையும் மேற்கொள்ள வேண்டாம். தாய்வழி உறவுகளுக்காக செலவு செய்யவேண்டி வரும்.

**தனுசு** மனதில் உற்சாகமும், செயல்களில் பரபரப்பும் காணப்படும். கணவன் – மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். உங்கள் யோசனையை வாழ்க்கைத்துணை ஏற்றுக் கொள்வார்.

**மகரம்** புதிய முயற்சி சாதகமாகமுடியும். காரிய அனுகூலம் உண்டாகும். உங்கள் முயற்சிகளுக்கு சகோதரர்கள் ஆதரவாக இருப்பார்கள். தந்தையின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**கும்பம்** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். மனஉறுதியுடன் முடிவெடுத்து செயற்படுவீர்கள். சிலருக்குக் குடும்பத்துடன் குலதெய்வப் பிரார்த்தனையை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும்.

**மீனம்:** மனதில் தைரியமும் உற்சாகமும் பெருக்கெடுக்கும். துணிச்சலாகச் செயற்படுவீர்கள். புதிய முயற்சி சாதகமாக முடியும். தெய்வப்பணிகளில் ஈடுபடும் வாய்ப்பு ஏற்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# இலங்கையும் எல்-நினோவும்..!

உலகளவில் எல்-நினோவின் தாக்கம் வலுவான நிலையை அடைய ஆரம்பித்திருக்கின்றது. ஐரோப்பிய நர்டுகளில் அடுத்தடுத்து வீசும் வெப்ப அலைகள் ஆயிரக்கணக்கான மக்களைக் காவு வாங்கியிருக்கின்றன. இதன் தாக்கம் மேலும் வியாபிக்கும் என்றும், ஒட்டுமொத்த உலகமும் பல ட்ரில்லியன் டொலர் பொருளாதார இழப்பைச் சந்திக்கும் எனவும் துறைசார் அமைப்புகள் பகிரங்கமாக எச்சரிக்கை விடுத்திருக்கின்றன. எனவே, எல்-நினோ என்றால் என்ன? எல்-நினோவின் பாதிப்புக்கு உட்படும் வலயத்தில் இலங்கை உள்ளதா? இதனால் ஏற்படும் முழுமையான பாதிப்பு எத்தகையது? உள்ளிட்ட கேள்விகளுக்கு பதில்தேட வேண்டியது இன்று அவசியமாகின்றது.

பசுபிக் பெருங்கடலின் மத்திய மற்றும் கிழக்கு வெப்பமண்டலப் பகுதியில் கடல் மேற்பரப்பு நீர் வழக்கத்துக்கு மாறாக வெப்பமடைவதை 'எல்-நினோ' என்கின்றோம். இது உலகளாவிய வானிலை மாற்றங்களை ஏற்படுத்தும் ஒரு சக்திவாய்ந்த இயற்கை நிகழ்வாகும். எல்-நினோ காலத்தில், பசுபிக் பெருங்கடலில் ஏற்படும் காற்று வீச்சு மாற்றங்களால், ஆசியாவை நோக்கி வரவேண்டிய மழைமேகங்கள் திசைமாறிச் செல்கின்றன. இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் தென்மேற்குப் பருவமழை வழக்கத்தை விடக் குறைவதால் கடுமையான வறட்சி ஏற்படுகிறது. நீர்நிலைகள் வற்றி, குடிதண்ணீர்த் தட்டுப்பாடு தீவிரமடைகிறது. தண்ணீர்த் தட்டுப்பாட்டால் விவசாயம் வலுவிழந்து பஞ்சமும், பசியும், பட்டினியும் தலைவிரித்தாடும் நிலைமை ஏற்படுகின்றது.

எனவே, எல்-நினோவால் ஏற்படும் தாக்கத்தை ஏதோ மூன்றாம் உலக நாடுகளுக்கு உரிய விடயமாக நாம் கருதமுடியாது. மிகுந்த வெப்பமான கோடை காலத்தை எதிர்கொள்வதற்கு ஒரு நாடாக எத்தகைய தயார்ப்படுத்தல்கள் அவசியமோ அதைவிடப் பலமடங்கு விழிப்புணர்வுடனும், ஆயத்த நிலையுடனும் நாங்கள் செயற்படவேண்டியது அவசியமாகும். இலங்கை ஒரு விவசாயப்பூமி. அத்துடன் இந்தத் தீவு குடிதண்ணீருக்காக மழை நீரையே நம்பியுள்ளது. மின்னுற்பத்தி தொடக்கம் பல துறைகளில் மழை நீரின் தாக்கம் கணிசமான அளவுக்கு உள்ளது. எனவே, எல்-நினோவின் ஆதிக்கம் நிச்சயம் இலங்கையையும் இலங்கையின் பொருளாதாரத்தையும் புரட்டிப்போடும். இதில் எவ்வித மாற்றுக்கருத்தும் இல்லை. ஆதலால், அதற்கேற்ற வகையில் ஒரு நாடாக நாங்கள் தயாராக வேண்டியது அவசியம்.

எல்-நினோ கடும் வறட்சியை மட்டும் ஏற்படுத்துவதல்ல. மாறாக அளவுக்கு அதிகமான மழைப்பொழிவு, வெள்ளப்பேரிடர் என்பன ஏற்படவும் காரணமாக அமைகின்றது. எனவே, இந்தப் பேரிடர் நிலைமையை எதிர்கொள்வதற்கு நிபுணத்துவ ஆலோசனையை அரசாங்கம் உடனடியாகப் பெறவேண்டும். இதற்கு முன்னர் ஓரிரு தடவைகள் இலங்கை எல்-நினோவை எதிர்கொண்டுள்ளது. ஆனால், தற்போதைய எல்-நினோ மிகவும் ஆபத்தானது என்பதுடன் வீரியம் மிக்கது. எனவே, இதன் சக்தியையும் தாற்பரியத்தையும் அரசாங்கம் புரிந்துகொள்வது அவசியம்.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com






## பொய்யாமொழி

**கொடுப்பது அழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம்
உண்பதூஉம் இன்றிக் கெடும்**

**பொருள்:** பிறர்க்கு உதவியாகக் கொடுக்கப்படும் பொருளைக் கண்டு பொறாமைப்படுகின்றவனுடைய சுற்றம், உடையும் உணவும் இல்லாமல் கெடும்.




# டெங்குப் பிடியில் இலங்கை 62,000 பேருக்குப் பாதிப்பு



**கொழும்பு, ஜூலை 8**
**இலங்கையில் இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் பதிவாகியுள்ள மொத்த டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 62,000ஐக் கடந்துள்ளதாக தேசிய டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.**

தேசிய டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவின் பதில் பணிப்பாளர் மருத்துவர் கபில கன்னங்கர தெரிவிக்கையில், இம்மாதத்தில் இதுவரையான சில நாள்களில் மாத்திரம் நாடு முழுவதும் 7,038 புதிய டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இது நாளாந்தப் பரவல் விகிதம் மிகத் தீவிரமாக அதிகரித்து வருவதைக் காட்டுகின்றது.

இலங்கையில் பதிவாகியுள்ள ஒட்டுமொத்த டெங்கு நோயாளர்களில், பாதிக்கும் மேற்பட்டோர் மேல் மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் எனத் தரவுகள் உறுதிப்படுத்தியுள்ளன. மேல் மாகாணத்தில் மாத்திரம் கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்கள் தலா 12,000க்கும் அதிகமான பாதிப்புகளுடன் அபாயகரமான வலயங்களாக மாறியுள்ளன.

எனவே, பொதுமக்கள் தங்களது வீடு மற்றும் சூழலில் நீர் தேங்கி நிற்கும் இடங்களை உடனடியாக துப்புரவு செய்து, டெங்கு பெருகுவதைத் தடுக்கவேண்டும்- என்றார். (ச-இ)

## 1,020 குடும்பங்களுக்கு விரைவில் புதிய வீடுகள்

கொழும்பு,ஜூலை 8
அரசாங்கத்தின் தேசிய வறுமை ஒழிப்புத் திட்டத்தின் கீழ், சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தால், நாடு முழுவதும் 1,020 குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களுக்கு, புதிய வீடுகள் வழங்கும் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களின் வாழ்வாதார மேம்பாடு, தொழிற்பயிற்சி, வேலைவாய்ப்பு, சமூக வலுவூட்டல் மற்றும் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் நோக்குடன் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இதற்கான பயனாளிகள் சமுர்த்தி மற்றும் பிரேதச மட்ட அதிகாரிகளின் பரிந்துரைகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்படவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-இ)

## தங்கத்தின் விலை சரிவு

கொழும்பு, ஜூலை 8
உள்நாட்டுச் சந்தையில் தங்கத்தின் விலை நேற்றுக் குறைவடைந்துள்ளதாக அகில இலங்கை நகையக வியாபாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

அதன்படி, 24 கரட் தங்கம் ஒரு பவுண் 382,000 ரூபாவாக விற்பனை செய்யப்பட்ட நிலையில், இன்று அதன் விலை 3,000 ரூபாவால் குறைந்து 379,000 ரூபாவாக பதிவாகியுள்ளது.

22 கரட் தங்கம் பவுண் ஒன்று 348,700 ரூபாவாகவும், விற்பனை செய்யப்படுகிறது. (ச-இ)

## சிறுமி துஷ்பிரயோகம்; சிறுவன் கைது

ரிக்ரொக் சமூக வலைத்தளம் ஊடாகப் பழகிய 14 வயது சிறுமியொருவரைப் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய சம்பவம் தொடர்பாக, 17 வயதுடைய சிறுவனை களுத்துறை வடக்கு பொலிஸார் கைதுசெய்துள்ளனர். பாதிக்கப்பட்ட சிறுமி தற்போது மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். (ச-இ)

டெங்கு அபாயம்

## தற்காலிகமாக மூடப்பட்டது மொரட்டுவ பல்கலைக்கழகம்

டெங்கு அபாயம் காரணமாக மொரட்டுவ பல்கலைக்கழகம் நேற்றுமுன்தினம் இரண்டு வார காலத்துக்கு தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

தற்போது பல்கலைக்கழகத்தில் பரீட்சைகள் நடைபெற்று வரும் நிலையில், காய்ச்சலால் பாதிக்கப்பட்ட சில மாணவர்கள் அந்தப் பரீட்சைகளில் கலந்துகொண்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. இதன் காரணமாகவே பல்கலைக்கழகத்தைத் தற்காலிகமாக மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இருப்பினும், மாணவர்களுக்கான விரிவுரைகள் இணையவழியில் தொடர்ந்தும் நடைபெறும் எனப் பல்கலைக்கழக நிர்வாகம் தெரிவித்துள்ளது. (ச-இ)

நாளை
வியாழக்கிழமை-ஆனி 25
09.07.2026
சுபநேரம் : 07.28 - 08.58
ராகுகாலம் : 01.28 - 02.58

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களின் ஆன்மிகப் பாதைக்கு அரச திணைக்களம் முட்டுக்கட்டை



## முள்ளிக்குளம் மக்கள் கவனவீர்ப்பு

**மன்னார்,ஜூலை 8**

**முள்ளிக்குளம் கிராமத்தில் இருந்து மறிச்சுக்கட்டிப் பூக்குளம் ஊடாக, பள்ள கண்டல் அந்தோனியார் ஆலயத்துக்குச் செல்லும் குறுக்கு வீதியை வழிபாடுகளுக்காகத் திறந்து விடக்கோரி முள்ளிக்குளம் மக்கள் நேற்றுமுன்தினம் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.**

வரலாற்றுச் சிறப்புமிக்க பள்ளகண்டல் புனித அந்தோனியார் ஆலயத்தின் ஆண்டுத் திருவிழாக் கொடியேற்றம் இன்று ஆரம்பமாகின்றது. இதனைத் தொடர்ந்து ஒன்பது நாள்கள் நவநாள் வழிபாடுகள் இடம்பெற்று, எதிர்வரும் ஜூலை 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கூட்டுத் திருவிழாத் திருப்பலி மிக விமரிசையாக ஒப்புக் கொடுக்கப்படவுள்ளது.


கடந்த காலங்களில் திருவிழாக் காலங்களின் போது, இப்பகுதி மக்கள் எவ்வித அசௌகரியங்களும் இன்றி இந்தக் குறுக்கு வீதியூடாகப் பள்ளகண்டல் அந்தோனியார் ஆலயத்திற்குச் சென்று வழிபாடுகளில் ஈடுபட்டு வந்தனர். எனினும் தற்போது மன்னார் முள்ளிக்குளம் இருந்து மறிச்சுக்கட்டி பூக்குளம் வழியாக பள்ள கண்டல் ஆலயத்துக்குச் செல்ல வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் அனுமதி மறுத்துள்ளது. தடை விதிக்கப்பட்டுள்ள குறுக்கு வீதியூடாகப் பயணித்தால், முள்ளிக்குளத்தில் இருந்து பள்ளகண்டல் ஆலயத்தை அடைய வெறும் 30 கிலோமீற்றர் தூரமேயாகும். ஆனால், வனஜீவராசிகள் திணைக்களத்தின் இந்தத் தன்னிச்சையான தடையால் வெறும் 30 கிலோமீற்றரில் முடிய வேண்டிய ஆன்மிகப் பயணம், 250 கிலோமீற்றர் தூரப் பெருந்தொலைவுப் பயணமாக மாறியுள்ளது என்று போராட்டத்தில் ஈடுபட்ட கிராம மக்கள் தெரிவித்துள்ளனர்.

குறித்தபோராட்டத்தில்முள்ளிக்குளம் பங்குத்தந்தை அருட்தந்தை டெரன்ஸ் குளாஸ்,மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோ மற்றும் பணியாளர்கள், மனித உரிமை செயற்பாட்டாளர்கள் கலந்துகொண்டனர். (க-213)

# மீனவரின் மோட்டார் சைக்கிள் இனந்தெரியாதோரால் சேதம்

யாழ்ப்பாணம்,ஜூலை 8

சங்குப்பிட்டிப் பாலத்துக்கு அருகில் கடற்றொழிலுக்குச் சென்றவரால் தரித்து விடப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் இனந்தெரியாத நபர்களால் அடித்துச் சேதமாக்கப்பட்டுள்ளது. கைதடி நாவற்குழியைச் சேர்ந்த குறித்த நபர் வழமையான தொழில் நடவடிக்கைக்கு சங்குப்பிட்டிப் பாலத்துக்கு அருகில் செல்லும் நிலையில், அன்றைய தினமும் வழமையான இடத்தில் மோட்டார் சைக்கிளை நிறுத்தி விட்டு, கடலுக்குள் இறங்கியுள்ளார்.




மோட்டார் சைக்கிளைத் தாக்கும் சத்தம் கேட்டவுடன் வீதிக்கு வருவதற்குள் சந்தேகநபர்கள் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பில் பூநகரிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளது. (க)

# வேலையற்ற பட்டதாரிகளுடன் யாழில் விசேட கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜூலை 8

வடமாகாண வேலையற்ற பட்டதாரிகளின் விவரங்களைச் சேகரிக்கும் நோக்குடனான திறந்த கலந்துரையாடல் எதிர்வரும் 12ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு, யாழ். தந்தை செல்வா கலையரங்கில் இடம்பெறவுள்ளது. இது தொடர்பில் வடக்கு மாகாண வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தின் செயலாளர் ஜேம்ஸ் கபிலன் போல் தெரிவித்துள்ளதாவது-

வடமாகாண வேலையற்ற பட்டதாரிகள் தொடர்பான சரியான தகவல்கள், தரவுகள் இதுவரை இல்லை. நாம் வேலைவாய்ப்புகளைக் கோரும்போது, தரவுகள் கைவசமிருந்தாலே வேலைவாய்ப்பை இலகுவாகப் பெற்றுக் கொள்ளமுடியும். எதிர்வரும் செப்ரெம்பர் மாதமளவில் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான ஆட்சேர்ப்பு இடம்பெறவுள்ளது. அது போட்டிப் பரீட்சை இன்றி நடைபெறவுள்ளதாக அறிகின்றோம். தனியார் துறையிலும் பட்டதாரிகளுக்கான வேலைவாய்ப்புகள் காணப்படுகின்றன. அத்துடன் எதிர்கால வடமாகாண அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் தொடர்பாக சுமார் ஆயிரத்துக்கும் அதிகமான வேலைவாய்ப்புகள் காத்திருக்கின்றன. பட்டதாரிகள் தொடர்பான சரியானதரவுகள் இருந்தாலே, அவர்கள் சார்பானதுறைக்கு வேலைவாய்ப்பைப் பெற்றுக்கொள்ளமுடியும். எனவே, வடமாகாண வேலையற்ற பட்டதாரிகள் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை தந்தை செல்வா கலையரங்குக்கு நேரில் வருகைதந்து தமது பட்டப்படிப்புத் தொடர்பான விவரங்களைப் பதிவுசெய்ய முடியும். அத்துடன் அரசியல்வாதிகள், சமூகச் செயற்பாட்டாளர்கள், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் என அனைத்துத் தரப்பினரும் இந்தத் திறந்த கலந்துரையாடலில் பங்குபற்றி கருத்துகளை முன்வைக்கலாம்-என்றார். (க-66)




# கரும்புலி மாவீரர்களின் பெற்றோர் கௌரவிப்பு

கிளிநொச்சி,ஜூலை 9

ஈழத்தமிழர் விடுதலைப் போராட்ட வரலாற்றில் கரும்புள்ளிகளாக தங்கள் இன்னுயிர்களைத் தியாகம் செய்த கரும்புலி கப்டன் மில்லர் மற்றும் கடற்கரும்புலி கப்டன் அங்கயற்கண்ணி ஆகியோரது பெற்றோர் கரும்புலிகள் நாளாகிய கடந்த ஞாயிற்றுக்கிழமை, பொன்னாடை போர்த்தி மதிப்பளிக்கப்பட்டனர். கரைச்சிப் பிரதேசசபையின் முன்னாள் உறுப்பினர் அவர்களுக்கான கௌரவிப்பை வழங்கினார். (க-55)

# யாழ்.போதனா மருத்துவமனையில் வருடத்தில் 5000 சுகப்பிரசவங்கள்

## பணிப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை 8

யாழ்.போதனா மருத்துவமனையில் வருடம் தோறும் சுமார் 5000 சுகப்பிரசவங்கள் இடம்பெறுகின்றன. இந்தச் சுகப்பிரசவங்களை பாதுகாப்பாகவும், வெற்றிகரமாகவும் நடத்தும் குடும்பநலச் சுகாதார உத்தியோகத்தர்களின் பங்களிப்பு அளப்பரியது என்று மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி த.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

குடும்பநலச் சுகாதார உத்தியோகத்தர்களின் அர்ப்பணிப்பையும், தொழில்முறைச் சேவைகளையும் பாராட்டிக் கௌரவிக்கும் நோக்கில், குடும்பநலச் சுகாதார உத்தியோகத்தர்கள் தினம் மருத்துவமனையில் நேற்றுமுன்தினம் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. குறித்த நிகழ்வில் அவர் இதனைத் தெரிவித்தார்.

நிகழ்வில் குடும்பநலச் சுகாதார உத்தியோகத்தர்களின் அர்ப்பணிப்பான சேவைகளைப் பாராட்டி அவர்களுக்குப் பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. நிகழ்வில் மருத்துவ நிபுணர்கள், மருத்துவர்கள், தாதிய உத்தியோகத்தர்கள் மற்றும் சுகாதாரத்துறையினர் கலந்துகொண்டனர். (க-66)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## தேசிய உப்பு நிறுவனம்
## கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சு

தேசிய உப்பு நிறுவனம் என்பது கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சின் கீழ் இயங்கும் ஒரு அரசாங்கத்திற்கு சொந்தமான கம்பனியாகும். கொழும்பு தலைமை அலுவலகம். மன்னார் உப்பளம் மற்றும் ஆனையிறவு உப்பளம் (கிளிநொச்சி) ஆகியவற்றில் பணியாற்றுவதற்காக பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. உள்ளக கணக்காய்வாளர் - (MM 1-1)

நிரந்தர அடிப்படையில் 01 வெற்றிடம் - தலைமை அலுவலகம்

**தேவையான தகைமைகள்: வெளிவாரி விண்ணப்பதாரர்கள்**

1. பல்கலைக்கழக மானியங்கள ஆணைக்குழுவினால் (U.G.C) அங்கீகரிக்கப்பட்ட வர்த்தகம் / கணக்கியல் / வணிக முகாமைத்துவம் / வணிக நிர்வாகம் ஆகிய துறைகளில் ஒன்றில் பட்டம் பெற்றிருப்பதுடன். பட்டம் பெற்ற பின்னர் பொதுச் சேவை. கூட்டுத்தாபனம். சட்டப்பூர்வ சபை/ நிறுவனம் அல்லது ஒரு புகழ்பெற்ற தனியார் நிறுவனத்தில் குறைந்தபட்சம் ஒரு (1) வருட தகைமைக்குப் பிந்திய அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும். **அல்லது**

2. அங்கீகரிக்கப்பட்ட ஒரு தொழில்முறை பட்டய நிறுவனத்தின் (Chartered Institute) இடைநிலைத் தேர்வில் (Intermediate Examination) தேர்ச்சி பெற்றிருப்பதுடன். அதனுடன் தொடர்புடைய பாடநெறி இப்பதவிக்கு பொருத்தமானதாக இருத்தல் வேண்டும். அத்துடன் சம்பந்தப்பட்ட துறையில் குறைந்தபட்சம் ஒரு வருட தகைமைக்குப் பிந்திய அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

**உள்வாரி விண்ணப்பதாரர்கள்**

1. மேலே குறிப்பிடப்பட்டுள்ள வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கு தேவையான தகைமைகளைக் கொண்டிருத்தல். **அல்லது**

2. பதவிக்கு பொருத்தமான துறையில், இளநிலை முகாமையாளர் (Junior Manager - JM) பிரிவில் உள்ள ஒரு பதவியில் குறைந்தபட்சம் ஐந்து (05) ஆண்டுகள் திருப்திகரமான சேவையை நிறைவு செய்திருத்தல்.

- சம்பள அளவுத்திட்டம்: MM 1-1-2025 - (சம்பளம் - ரூபா 91.690 - சம்பள அதிகரிப்பு - 10 X 2.480 - 15X 3.450 - 168.240) மற்றும் வாழ்க்கைச் செலவுப் படி ரூபா 17.800/-.

தொழில்முறை கொடுப்பனவு - ரூபா 25.000/-. தொலைபேசிக் கொடுப்பனவு ரூபா 2.000/- ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய கொடுப்பனவுகளும் வழங்கப்படும். (2026 ஆம் ஆண்டிற்கான ஆரம்பச் சம்பளம் - ரூபா 81.710/-).

- வயது எல்லை: 22 வயதுக்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு அதிகபட்ச வயது எல்லை பொருந்தாது.
- தெரிவு முறை: ஒழுங்கமைந்த நேர்முகத் தேர்வு மூலம்.

**2. உதவி முகாமையாளர்- உப்பளம் (JM 1-1)**

**நிரந்தர அடிப்படையில் 01 வெற்றிடம் - ஆனையிறவு உப்பளம்**

**தேவையான தகைமைகள்: வெளிவாரி விண்ணப்பதாரர்கள்**

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் (U.G.C) அங்கீகரிக்கப்பட்ட அறிவியல் (Science) அல்லது முகாமைத்துவம் (Management) துறையில் ஒரு பட்டம் பெற்றிருத்தல்.

**அல்லது**

2. சம்பந்தப்பட்ட துறையில் NVQ மட்டம் - 7 இற்கு குறையாத தொழிற்தகைமைச் சான்றிதழைக் கொண்டிருத்தல். **அல்லது**

3. தர முகாமைத்துவ (Quality Management) துறையில் NVQ மட்டம் - 6 இற்கு குறையாத தொழிற்தகைமைச் சான்றிதழைக் கொண்டிருப்பதுடன், சம்பந்தப்பட்ட துறையில் ஐந்து (05) வருட அனுபவம் பெற்றிருத்தல். **அல்லது**

4.தர முகாமைத்துவம் (Quality Management) துறையில் NVQ மட்டம் 5 இற்கு குறையாத தொழிற்தகைமைச் சான்றிதழைக் கொண்டிருப்பதுடன், சம்பந்தப்பட்ட துறையில் பத்து (10) வருட அனுபவம் பெற்றிருத்தல்.

**உள்வாரி விண்ணப்பதாரர்கள்**

1. மேலே குறிப்பிடப்பட்டுள்ள வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கு தேவையான தகைமைகளைக் கொண்டிருத்தல். **அல்லது**

2. பதவிக்கு பொருத்தமான துறையில். "முகாமைத்துவ உதவியாளர் தொழிநுட்பவியல்" (Management Assistant Technological - MA 2-1) தரம் II பதவியில் குறைந்தபட்சம் ஐந்து (05) ஆண்டுகள் திருப்திகரமான சேவையை நிறைவு செய்திருத்தல்.

- சம்பள அளவுத்திட்டம்: JM 1-1-2025: ரூபா ஆரம்பச் சம்பளம் 72.650 - சம்பள அதிகரிப்பு - 10 x 1,360 - 18 x 2,040 - 122.970 மற்றும் வாழ்க்கைச் செலவுப் படி ரூபா 17.800/-. தொலைபேசிக் கொடுப்பனவு ரூபா 2.000/- ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய கொடுப்பனவுகளும் வழங்கப்படும். (2026 ஆம் ஆண்டிற்கான ஆரம்பச் சம்பளம் - ரூபா 65.633/-).
- வயது எல்லை: 22 வயதுக்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு அதிகபட்ச வயது எல்லை பொருந்தாது.

தெரிவு முறை: ஒழுங்கமைந்த நேர்முகத் தேர்வு மூலம்.

**3. தொழில்நுட்ப உத்தியோகத்தர் - (MA. 2-1)**

**நிரந்தர அடிப்படையில் 01 வெற்றிடம் - ஆனையிறவு உப்பளம்**

தேவையான தகைமைகள்: வெளிவாரி விண்ணப்பதாரர்கள்

மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு தொழில்நுட்ப/ தொழிற்பயிற்சி நிறுவனத்தினால் வழங்கப்பட்ட. சம்பந்தப்பட்ட துறையில் (சிவில் ) தேசிய தொழிற் தகைமை மட்டம் 5 (NVQ Level 5) இற்குக் குறையாத தகைமைச் சான்றிதழைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**உள்வாரி விண்ணப்பதாரர்கள்**

- மேலே குறிப்பிடப்பட்டுள்ள வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கு தேவையான தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
- சம்பள அளவுத்திட்டம்: MA 2-1-2025 - (ஆரம்பச் சம்பளம்: ரூபா 50.540 - சம்பள அதிகரிப்பு: 10 × 540 - 7 × 630 - 4 x 890 - 20 x 1,190 - 87.710/-) மற்றும் வாழ்க்கைச் செலவுப் படி ரூபா 17.800/- போன்ற அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய கொடுப்பனவுகளும் வழங்கப்படும். (2026 ஆம் ஆண்டிற்கான ஆரம்பச் சம்பளம் - ரூபா 46.960/-).
- **வயது எல்லை:** 18 வயதுக்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு அதிகபட்ச வயது எல்லை பொருந்தாது.
- **தெரிவு முறை:** ஒழுங்கமைந்த நேர்முகத் தேர்வு மூலம்.

**4. முகாமைத்துவ உதவியாளர் (Management Assistant - MA 1-1)**

**நிரந்தர அடிப்படையில் (05 பதவிகள்)**

**02 வெற்றிடங்கள் தலைமை அலுவலகத்தில், 02 வெற்றிடங்கள் ஆனையிறவு உப்பளத்தில் மற்றும் 01 வெற்றிடம் மன்னார் உப்பளத்தில்.**

**தேவையான தகைமைகள்: வெளிவாரி விண்ணப்பதாரர்கள்**

- **கல்வித் தகைமை:**

a) க.பொ.த (சா.த) பரீட்சையில் ஒரே அமர்வில் பின்வரும் பாடங்கள் உட்பட நான்கு பாடங்களில் திறமைச் சித்திகளுடன் (Credit passes) ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்:

**1. சிங்களம் / தமிழ் II. ஆங்கில மொழி (பதவிக்குத் தேவையானதாயின்) III. கணிதம்**

b) க.பொ.த (உ.த) பரீட்சையில் (பொது வினாத்தாள் நீங்கலாக) மூன்று பாடங்களில் சித்தியடைந் திருத்தல் வேண்டும். (கொழும்பு தலைமை அலுவலகத்தில் உள்ள ஒரு பணியிடத்தைத் தவிர. இப்பணி யிடங்களில் பெரும்பாலானவை நிதிப் பிரிவின் கீழ் வருவதால். வர்த்தகப் பிரிவு (Commerce Stream) கூடுதல் சாதகமாக அமையும்.)

- மற்றும்: சம்பந்தப்பட்ட துறையில் தட்டச்சு / கணினி அறிவு பெற்றிருத்தல் வேண்டும்.

**உள்வாரி விண்ணப்பதாரர்கள்** : ஆரம்ப நிலை - திறன்மிக்க (Primary Level - Skilled). ஆரம்ப நிலை - பகுதி திறன்மிக்க (Primary Level - Semiskilled) மற்றும் ஆரம்ப நிலை - திறனற்ற (Primary Level - Unskiled) ஆகிய ஊழியர் பிரிவுகளைச் சேர்ந்த பின்வரும் தகைமைகளைக் கொண்ட ஊழியர்கள் விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள் ஆவார்.

**கல்வித் தகைமை:** பின்வரும் பாடங்கள் உட்பட நான்கு பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஆறு பாடங்களில் க.பொ.த (சா.த) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்:

1. சிங்களம் / தமிழ் II. ஆங்கில மொழி (பதவிக்குத் தேவையானதாயின்) III. கணிதம்

ஏனையவை : மேற்குறிப்பிட்ட ஊழியர் பிரிவுகளின் கீழ் நிரந்தரப் பதவி ஒன்றில் குறைந்தபட்சம் ஐந்து (05) ஆண்டுகள் திருப்திகரமான சேவையை நிறைவு செய்திருத்தல் வேண்டும்.

சம்பள அளவுத்திட்டம்: MA 1-1-2025: ரூபா ஆரம்பச் சம்பளம் 46.220 - சம்பள அதிகரிப்பு: 10 × 540 -7× 630 - 4 x 890 - 20×1,190 - 83,390 மற்றும் வாழ்க்கைச் செலவுப் படி ரூபா 17.800/-போன்ற அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய கொடுப்பனவுகளும் வழங்கப்படும். (2026 ஆம் ஆண்டிற்கான ஆரம்பச் சம்பளம் - ரூபா 43.312/-).

- வயது எல்லை: 18 வயதுக்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு அதிகபட்ச வயது எல்லை பொருந்தாது.
- **தெரிவு முறை:** ஒழுங்கமைந்த நேர்முகத் தேர்வு (Structured Interview) மூலம்.

: பொதுவான நிபந்தனைகள் (விண்ணப்பதாரர்கள் அனைவரும்):

1 ஒவ்வொரு விண்ணப்பதாரரும்.

i. இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்.

ii. பதவியின் கடமைகளைச் செவ்வனே ஆற்றுவதற்கும் தீவின் எந்தப் பகுதியிலும் பணியாற்றுவதற்கும் உடல் ரீதியாகவும் மன ரீதியாகவும் தகுதியுடையவராக இருத்தல் வேண்டும்.

iii. நன்னடத்தைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

உங்களது சுயவிபரக் கோவையை (CV) சான்றிதழ்களின் பிரதிகளுடன் 21.07.2026 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ பின்வரும் முகவரிக்கு கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கவும்.

General Manager
National Salt Ltd,
No.561/3, Elvitigala Mawatha, Colombo -05
011 2368974

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும். தகுதியான தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் மட்டுமே நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படுவர்.

77799) J-1




# இலங்கைக்குக் கடத்தவிருந்த 120 பந்தயப் புறாக்கள் பறிமுதல்

இராமநாதபுரம், ஜூலை 8

பாம்பன் வடக்கு மீன்பிடித் துறைமுகத்தில் இருந்து படகு மூலம் இலங்கைக்குக் கடத்துவதற்காக காரில் கொண்டு வரப்பட்ட 120 பந்தயப் புறாக்கள், கியூ பிரிவுப் பொலிஸாரால் நேற்றுப் பறிமுதல் செய்யப்பட்டன. பாம்பன் பாலத்துக்கு அருகில், சந்தேகத்துக்கு இடமான முறையில், பாம்பன் சாலை பாலத்தில் நீண்டநேரம் தரித்து நின்ற காரைச் சோதனையிட்டபோது, காருக்குள் 6 இரும்புக் கூடுகளில் 120 புறாக்கள் வைக்கப்பட்டிருந்தமை தெரியவந்தது. இதையடுத்து காருடன் பந்தயப் புறாக்களைப் பறிமுதல் செய்ததுடன், காரில்வந்த இருவரையும் கைதுசெய்து இராமேஸ்வரம் சுங்கத்துறை அலுவலகத்தில் ஒப்படைத்தனர்.

இருவரிடமும் நடத்திய விசாரணையில் பந்தயப் புறாக்கள் கடல் வழியாக இலங்கைக்குக் கடத்துவதற்காக மதுரையில் இருந்து கொண்டு வரப்பட்டன எனத் தெரிவித்துள்ளனர். (கு-56)


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
16 . 03 . 1943



சந்நிதியான் அடியில்
19 . 06 . 2025

## அமரர் கந்தையா கனகசபை

**(பட்டய நில அளவையாளர், உத்தரவு பெற்ற நில அளவையாளர், மட்டம் பார்ப்பவர், நீதிமன்ற ஆணையாளர், மதிப்பீட்டாளர், அகில இலங்கை சமாதான நீதவான்)**

காலச் சக்கரத்தில் ஓராண்டு ஓடி மறைந்ததே
கோலச் சிரிப்புற்ற உம் முகம் நெஞ்சில் நிறைந்ததே
மால்மருகன் திருவடியில் அமைதி கொண்டீரோ
சீலப் பெருமகனே உமை எண்ணி வாழ்வோமே!

நில அளவைத் தொழிலில் நிகரற்று விளங்கி நின்றீர்,
நலமிகு நற்பணிகள் பலவுமே செய்து வாழ்ந்தீர்!
கல்வி என்று வந்தோர்க்கு கரவின்றி உதவி நின்றீர்
முற்றிலும் கடமைகள் முடிந்ததென எண்ணியோ,
கூற்றன் அழைப்புக்கு மறுப்பின்றி சென்றீரோ?

125, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
மீசாலை வடக்கு, மீசாலை

என்றும் உங்கள் நினைவில்
குடும்பத்தினர்

(CS/61827) J-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

THE HALO TRUST

450 Thirunagar West
Kilinochchi
Sri Lanka

T: +94 (0) 212 285 466
vanni@halosrilanka.org
mail@halosrilanka.org
www.halotrust.org

## சாரதிகளுக்கான பதவி வெற்றிடங்கள்

ஹலோ ட்றஸ்ட் நிறுவனமானது ஐக்கிய ராச்சியத்தைத் தளமாகக் கொண்ட உலகின் மிகப் பெரிய சர்வதேச மனிதாபிமான கண்ணிவெடி அகற்றும் அரச சார்பற்ற நிறுவனமாகும் உலகளாவியரீதியில் 30 ஆண்டுகளுக்கு மேலாக நாங்கள் உயிரைக் காப்பாற்றி வருகிறோம். போரினால் பாதிக்கப்பட்ட சமூகங்களின் நிலத்தைப் பாதுகாப்பாக மீட்டெடுக்க உதவுகிறோம். மோதலில் பாதிக்கப்பட்டவர்களின் உயிர்களைப் பாதுகாப்பதும் வாழ்வாதாரத்தை மீட்டெடுப்பதும் எங்கள் நோக்கம்.
ஹலோ ட்றஸ்ட் நிறுவனமானது சாரதிகளுக்கான. விண்ணப்பங்களைக் கோருகின்றது. இப்பதவியின் அத்தியாவசிய சேவைகளாவன. பணிப்பகுதிகளுக்கு அணிகளை கொண்டு செல்வதற்கும் விபத்தொன்றின் போது அம்புலன்ஸ் சேவை வழங்குவதுமாகும்.

பதவி : சாரதி
இடம்: கிளிநொச்சி, முகமாலை, கொக்குத்தொடுவாய்
அறிக்கையிடல்: வாகனப்பகுதி முகாமையாளர் (Fleet Manager)

சாரதியின் கடமைகளாவன

- ஹலோ பணியாளர்கள். கருவிகள் மற்றும் பொருட்களை குறிப்பிட்ட இடங்களுக்கு சரியான நேரத்தில் பாதுகாப்பாக கொண்டு செல்வது.
- ஏதேனும் ஏற்றுதல் அல்லது இறக்குதல் கடைமைகளை மேற்கொள்வதற்கு முன் முகவரிகள் மற்றும் பிற போக்குவரத்து விபரங்கள் சரியானவையா என்பதை உறுதி செய்தல்.
- பணியாளர்களின் கருவிகள் மற்றும் பொருட்களை ஏற்றி இறக்குவதற்கு உதவுதல்.
- போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க மாற்று வழிகளைப் பயன்படுத்துதல்.
- ஹலோ வாகனங்களை எப்போதும் அனுமதிக்கப்பட்ட வாகனத் தரிப்பிடங்களில் நிறுத்துதல்.
- வாகனங்களை நாளாந்தம் துப்புரவு செய்தல் . கழுவுதல் மற்றும் பராமரித்தல்.
- முதல் வாகன அணிவகுப்புச் சோதனை மற்றும் ஹலோ வாகனங்களின் வழக்கமான சோதனைகளைச் செய்தல்.
- வாகனக் காப்புறுதி மற்றும் வரிகள் உட்பட சட்ட ரீதியான ஆவணங்கள் புதுப்பிக்கப்பட்ட நிலையில் இருப்பதை உறுதி செய்தல்.
- வாகனப்பதிவுப் புத்தகத்தை பராமரித்தல் . கிலோ மீற்றர் போய் வந்த இடங்கள் இறுதி இடங்கள் மற்றும் எரிபொருள் வழங்கல். பயன்பாடு மற்றும் நுகர்வு உட்பட வேலை நேரத்தை பதிவு செய்தல்.
- ஹலோ வாகனத்தில் போய் வரும் சரியான நேரத்தினைப் பதிவு செய்து வழங்குதல்.
- ஏதேனும் விபத்துக்கள் காயங்கள் மற்றும் வாகன சேதங்கள் ஏற்படின் சரியான நேரத்திற்கு அலுவலகத்திற்கு அறிவித்தல்.

மேற்குறிப்பிட்ட பதவிநிலைக்கு விண்ணப்பிக்க ஆர்வமுள்ளவர்கள் தங்கள் சுயவிபரக் கோவைகளை எதிர்வரும் 17 ஜீலை 2026 வெள்ளிக்கிழமைக்கு முன்னதாகக் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு பதிவுத்தபால் மூலமாகவோ. நேரிலோ அல்லது மின்னஞ்சல் மூலமாகவோ அனுப்பி வைக்கலாம்.

HR Manager
The HALO Trust,
450 Thirunagar West, Kilinochchi
Email: hr@halosrilanka.org

# பயிற்சிப் பட்டறை

யாழ்ப்பாணம்,ஜூலை 8

யாழ். மாவட்டச் செயலரின் ஆலோசனைக்கமைய கவிதைத்துறையில் ஆர்வமுள்ள இளங்கலைஞர்களை ஊக்குவிக்கும் வகையிலான கவிதைப் பயிற்சிப் பட்டறை எதிர்வரும் 18ஆம் திகதி மாவட்டச் செயலகத்தில் நடைபெறவுள்ளது. பிரதேசத்தில் கவிதைத் துறையில் ஆர்வமுள்ள ஐவரை பயிற்சிப் பட்டறைக்கு அனுப்பி வைக்குமாறு, மாவட்டத்தில் உள்ள அனைத்து பிரதேச செயலகங்களுக்கும், மாவட்ட மேலதிக செயலர் க. சிவகரன் அறிவித்துள்ளார். (க-9)

# பெருந்திருவிழா

சாவகச்சேரி,ஜூலை 8

சாவகச்சேரி மீசாலை பன்றிக்கேணி முருகமூர்த்தி கோவில் பெருந்திருவிழா எதிர்வரும் 16ஆம் திகதி வியாழக்
கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து 15 தினங்கள் நடைபெறும் திருவிழாக்களில் எதிர்வரும் 29ஆம் திகதி தேர்த்திருவிழா இடம் பெறும். (க-9)

# செல்லப்பா சுவாமிகளின் குருபூசை

யாழ்ப்பாணம்,ஜூலை 8

நல்லூர் தேரடிச் சித்தர் செல்லப்பா சுவாமிகளின் மாதாந்த குரு பூசை நிகழ்வு, நல்லூரில் அமைந்துள்ள சுவாமிகளின் நினைவாலயத்தில் நாளைமறுதினம் வியாழக்கிழமை நடைபெறும். அன்றையதினம் காலை 9 மணிக்கு திருமுறை நற்சிந்தனைப் பாடல்கள் மற்றும் பாராயணமும், தொடர்ந்து முற்பகல் 11 மணிக்கு 'பல்லோரும் ஏத்த பணிந்து' எனும் தலைப்பில் சமூக சேவையாளர் அ.விக்னேஸ்வரனின் சொற்பொழிவும் நடைபெறும். (க)

# புலமைப்பரிசிலுக்கு விண்ணப்பம் கோரல்

பளை,ஜூலை 8

அண்மையில் வெளியான க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தில் சித்திபெற்று, உயர்கல்விக்குத் தகைமை பெற்ற சமூர்த்திப் பயனாளிகளின் பிள்ளைகளுக்கு சிப்தொர புலமைப்பரிசில் வழங்குவதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. 2023 ஜூன் மாதம் வரை சமூர்த்திக் கொடுப்பனவு பெற்று, இதுவரை அஸ்வெசும நலன்புரி நன்மைகள் திட்டத்தில் இணைக் கப்படாத குடும்பங்கள் தமது பிரிவு, சமூர்த்தி அபிவிருத்தி அலுவலரிடம் உரிய படிவத்தைப் பெற்று விண்ணப்பிக்குமாறு பிரதேச சமூர்த்தி அலகினர் அறிவித்துள்ளனர். (க-9)

# மரண அறிவித்தல்



பிறப்பு
15 . 04 . 1951

இறப்பு
05 . 07 . 2026

## சபாபதி செல்வநாயகம்

சுன்னாகம் சிவன் கோவிலடியைப் பிறப்படமாகவும், மூர்த்தியான்கூடல் சுன்னாகம் மேற்கை வதிவிடமாகவும் கொண்ட சபாபதி செல்வநாயகம் (அப்புத்தம்பி) அவர்கள் 05.07.2026 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான சபாபதி - இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான தம்பிஐயா - சின்னாட்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், பட்டம்மாவின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற தனரூபன் மற்றும் சியாமளா (தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலை) துளசிதரன் (லண்டன்), கிரிசாந்தன், சுமங்கலி (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவபாலன் (இலங்கை மின்சாரசபை), நீலாம்பிகை (லண்டன்), சுரேந்திரன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் டிக்சிகா (கனடா), டிலக்சிகா, நிலக்சி (லண்டன்), வினுக்சி (லண்டன்), தஜீவ், கிருஸ்ணிகா, செங்கதிர் (கனடா), செந்தாளன் (கனடா), ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (09.07.2026) வியாழக்கிழமை பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மதியம் 12.00 மணியளவில் கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மூர்த்தியான்கூடல்,
சுன்னாகம் மேற்கு.

தகவல்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்



மண்ணில்
05 . 04 . 1960

விண்ணில்
07 . 07 . 2026

## சிவ ஸ்ரீ ஆறுமுகக்குருக்கள் சங்கர நாராயண சர்மா

(காரை கிழவன் காடு கந்தசாமி கோவில் பரம்பரை ஆதீன கர்த்தா)

காரைநகர் புதுரோட்டை பிறப்பிடமாகவும், கல்வியங்காடு புலவனார் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சிவ ஸ்ரீ ஆறுமுகக் குருக்கள் சங்கர நாராயண சர்மா அவர்கள் 07.07.2026 செவ்வாய்க்கிழமை அன்று சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகக்குருக்கள் - சிவகாம சுந்தரம்பாள் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரைகுருக்கள் - சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகனும், வல்லவாம்பாள் தேவி அவர்களின் அன்புக் கணவரும், முகுந்தன் ஐயா (ஸ்ரீ கந்தசாமி கோவில், கிழவன்காடு), தர்சிகா, தாரணி, ஆகியோரின் பாசமிகு தந்தையும், கிருபாகடாட்சம், தேவநாதன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், அனுசியா தேவி, சத்தியபாமா ஆகியோரின் அன்புச் சகோதரனும், திருஞான சம்பந்தமூர்த்தி குருக்கள் அவர்களின் மைத்துனரும், அபிமன்யு, நித்தியசிறி, சிவகணேசி, சிவசஸ்டிகா, கேவர்த்தினி ஆகியோரின் அன்புப் பேரனும், ஸ்ரீ முருகன், கௌரி, வைஸ்ணவி நந்தகுமார் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை 09.07.2026 வியாழக்கிழமை காலை 8.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புலவனார் வீதி, கல்வியங்காடு,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 583 3676


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

எதற்கும் அஞ்சாதே
எதையும் வெறுக்காதே
யாரையும் ஒதுக்காதே
உன் பணியை ஊக்கத்துடன்
செய்!

அரவிந்தர்

# புதன் பொய்கை

08.07.2026
புதன்கிழமை



# டிஜிற்றல் சுதந்திரமா? புதிய சிறையா?

யதுஷா சூரியகுமார்
(சமூகவியல் துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

தொழில்நுட்பத்தின் அசுர வளர்ச்சி, மனிதகுலத்தை அடுத்த கட்டப் பாய்ச்சலுக்கு நகர்த்தியுள்ளது என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. ஒரு காலத்தில், வீட்டின் நாற்புறச் சுவர்களுக்குள் முடங்கிக் கிடந்த பெண்கள், இன்று உலகளாவிய அறிவையும் அரிய வாய்ப்புகளையும் தங்களின் கைபேசித் திரைகளின் வழியே மிக எளிதாகப் பெற்றுக்கொள்கிறார்கள். கல்வி, வேலைவாய்ப்பு, சுயதொழில், சர்வதேசத் தொடர்புகள் என அனைத்திற்கும் இந்த டிஜிற்றல் உலகம் பெண்களுக்குப் பெரும் சுதந்திர வாசலைத் திறந்து வைத்துள்ளது என்பதை யாராலும் மறுக்க முடியாது.

ஆனால், நாணயத்தின் மறுபக்கத்தைப் போல, இந்த டிஜிற்றல் உலகம் பெண்களுக்குக் கண்ணுக்குத் தெரியாத புதியதொரு 'நவீன சிறையையும்' உருவாக்கியுள்ளது என்பதுதான் கசப்பான உண்மை. நிஜ சமூகத்தில் பெண்களுக்கு எதிராக நிலவும் ஆணாதிக்கச் சிந்தனைகளும் வன்முறைகளும், இன்று நவீன வடிவமாற்றம் பெற்று டிஜிற்றல் உலகுக்குள்ளும் அநாகரிகமாக ஊடுருவியுள்ளன. நிஜ உலகில் ஒரு பெண்ணைப் பின்தொடர்வதும், அவதூறு பரப்புவதும் எவ்வளவு பெரிய குற்றமோ... அதைவிடப் பல மடங்கு வேகமாகவும் கொடூரமாகவும் சமூக வலைத்தளங்களில் 'சைபர் வன்முறைகள்' இன்று தங்குதடையின்றி அரங்கேறி வருகின்றன.

**போலி உலகமும் சிதைக்கப்படும் சுய மரியாதையும்**

இன்று இளம் பெண்கள் இணையத்தில் எதிர்கொள்ளும் முதன்மைப் பேராபத்து, போலிக்கணக்குகளும், புகைப்படங்கள் தவறாகத் சித்திரிக்கப்படுவதும் ஆகும். முகநூலிலோ அல்லது இன்ஸ்டாகிராமிலோ ஒரு பெண் பகிரும் மிகச் சாதாரணமான ஒரு புகைப்படம், அவளது அனுமதியின்றித் திருடப்பட்டு, ஆபாசமாகவும் தவறான முறையிலும் சித்தரிக்கப்படும் அவலம் இன்று அன்றாடக் கதையாகிவிட்டது.

நிஜ உலகில் ஒரு தவறு நடந்தால் அங்கே சாட்சிகளைத் தேடலாம், நியாயம் கேட்கலாம். ஆனால், டிஜிற்றல் உலகில் ஒரேயொரு 'கிளிக்' மூலம் ஒரு நொடியில் பரப்பப்படும் ஒரு போலிச் செய்தியோ அல்லது மார்பிங் செய்யப்பட்ட புகைப்படமோ, அந்தப் பெண்ணின் ஒட்டுமொத்த வாழ்நாள் உழைப்பையும், அவளது குடும்பத்தின் சுயமரியாதையையும் நொடிப் பொழுதில் கேள்விக்குறியாக்கி விடுகிறது. இதனால்தான், திறமையும் ஆளுமையும் மிக்க பல இளம்பெண்கள் இணையத்தில் தங்களை வெளிப்படுத்திக் கொள்ளவே அச்சப்பட்டு, இந்த டிஜிற்றல் உலகை விட்டே முற்றாக ஒதுங்கும் 'டிஜிற்றல் முடக்கம்' இன்று சமகாலத்தில் பேரதிர்ச்சியை ஏற்படுத்திவருகிறது.



**குற்றவாளி சுதந்திரம்... பாதிக்கப்புட்டவளுக்குத் தண்டனை!**

இணைய அச்சுறுத்தலுக்கு ஆளாகும் பெரும்பாலான பெண்கள் அதனை வெளியில் சொல்வதே இல்லை என்பதும் ஆகப்பெரிய வேதனை. இதற்குக் காரணம், நமது சமூகம் இப்போதும் குற்றவாளியைக் குற்றஞ்சாட்டுவதற்குப் பதிலாக, பாதிக்கப்பட்ட பெண்ணின் மீதே பழியைப் போடுகிறது.

"நீ ஏன் முகநூலில் படம் போட்டாய்?"

"உனக்கு ஏன் இந்தத் தேவையில்லாத வேலை?" என்ற குடும்பத்தினரதும் சமூகத்தினரதும் கேள்விகளுக்குப் பயந்தே, பல பெண்கள் கடுமையான மன உளைச்சலுக்கு உள்ளாகிறார்கள்; இறுதியில், தற்கொலை போன்ற தவறான முடிவுகளை நோக்கித் தள்ளப்படுகிறார்கள். நிஜ உலகில் ஒரு பெண் தனியாகச் செல்லும்போது அவளுக்குப் பாதுகாப்புத் தேடுவது போலவே, டிஜிற்றல் உலகிலும் அவளது 'தனியுரிமை' என்பது அவளது அடிப்படை உரிமை என்பதை இந்தச் சமூகம் இன்னும் ஏற்றுக்கொள்ளத் தயங்குவது ஏனோ?

**பயந்து ஓடாதே... துணிந்து எதிர்கொள்!**

டிஜிற்றல் உலகம் என்பது நாம் பயந்து ஓடுவதற்கான தப்பியோட்டக் காடு அல்ல; மாறாக, அதனைத் துணிவோடும் விழிப்புணர்வோடும் எதிர்கொள்ள வேண்டிய போர்க்களம்! சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்தும் பெண்கள், தங்களின் கணக்குகளின் பாதுகாப்பு அமைப்புகளை பலப்படுத்திக் கொள்வதோடு, தங்களுக்கு நிஜமாகத் தெரிந்த நபர்களை மட்டுமே நண்பர்களாக இணைத்துக் கொள்ளவேண்டும். இணையத்தில் ஏதேனும் அச்சுறுத்தல் ஏற்பட்டால், பயந்துபோய் கணக்குகளை முடக்குவதோ அல்லது தனியாக அழுது மன உளைச்சலுக்கு ஆளாவதோ தீர்வாகாது. அதனை உடனடியாகப் பெற்றோரிடமோ, சைபர் குற்றப் பிரிவிடமோ கொண்டு செல்லவேண்டும்.

அதேபோல, பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்கள் வெறுமனே பாடங்களை மட்டும் கற்பிக்காமல், மாணவிகளுக்குத் தொழில்நுட்பப் பாதுகாப்பு மற்றும் சைபர் சட்டங்கள் குறித்த விழிப்புணர்வுப் பயிலரங்குகளைத் தொடர்ச்சியாக நடத்த முன்வரவேண்டும்.

டிஜிற்றல் உலகம் என்பது பெண்களுக்குக் கிடைத்த ஒரு வரப்பிரசாதம். அது நவீன ஆணாதிக்கச் சிந்தனைகளால் பெண்களுக்குரிய 'புதிய சிறையாக' மாறிவிடக் கூடாது. இணையத்தில் நடக்கும் அச்சுறுத்தல்களுக்கு எதிராகப் பெண்கள் விழிப்புணர்வுடன் இருக்கவேண்டியது எவ்வளவு முக்கியமோ, அதைவிட முக்கியம்... பாதிக்கப்பட்ட பெண்களுக்குத் தோள் கொடுத்துப் பாதுகாக்கும் ஆரோக்கியமானதொரு சமூக மனநிலை இங்கே உருவாக்கப்படவேண்டும். தொழில்நுட்பச் சுதந்திரம் என்பது பயமற்றதாக இருக்கும்போதுதான், உண்மையான பால்நிலைச் சமத்துவம் சாத்தியமாகும்!

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கிழக்கிலங்கையின் அறிவுப் பசியைத் தீர்க்கும் அட்சய பாத்திரம்:




எம். ஷாந்தன் சத்தியகீர்த்தி
(M.A, M.Ed) (விரிவுரையாளர், மட்டக் களப்பு தேசிய கல்வியியற் கல்லூரி)

'ஒரு நூலகம் திறக்கப்படும் போது, ஆயிரம் சிறைச்சாலைகள் மூடப்படுகின்றன.'
- சுவாமி விவேகானந்தர்

# மட்டக்களப்பு நவீன பொதுசன நூலகம்!

'உங்களுக்கு ஒரு கோடி ரூபா கிடைத்தால் என்ன செய்வீர்கள்?' என்று கேட்கப்பட்ட கேள்விக்கு, மகாத்மா காந்தி அளித்த அலாதியான பதில்: 'ஒரு நூலகம் கட்டுவேன்' என்பதாகும். அவரே இன்னோரிடத்தில், 'ஒரு வீட்டின் கதவுகளும் ஜன்னல்களும் மூடியிருக்குமானால் அதில் வாழ்வோருக்கு மரணமே நேரும். அதேபோல, பரந்த உலக அறிவுக்குச் சில கதவுகளும் ஜன்னல்களும் மூடப்பட்டால் மனிதனின் நுண்ணறிவு மடிந்துபோகும்' என்கிறார். இதிலிருந்தே ஒரு நூலகத்தின் உன்னதமான பெறுமதியை நாம் உணர்ந்துகொள்ளலாம்.

இலங்கையின் முதலாவது பெரிய நூலகமாக விளங்கும் யாழ்ப்பாணப் பொதுசன நூலகம், வடமாகாணத்தின் வரலாற்றுப் பொக்கிஷமாகத் திகழ்கிறது. அதனைத் தொடர்ந்து, இலங்கையின் இரண்டாவது பெரிய நூலகமாக இன்று கம்பீரமாக எழுந்துள்ள மட்டக்களப்பு நவீன பொதுசன நூலகம், கிழக்கு மாகாணத்தின் அறிவுக் கடலாகப் பெருமை சேர்க்கிறது. வடக்கு-கிழக்கு தமிழ்பேசும் தாயக நிலப்பரப்பில், நாட்டின் ஆகச்சிறந்த இரு பெரும் நூலகங்கள் அமைந்திருப்பது தமிழ்ச் சமூகத்தின் அறிவுசார் அடையாளத்திற்குச் சான்றாகும்.

**16 ஆண்டு காலக் காத்திருப்பும் புதிய முன்மாதிரியும்**

இந்த நவீன நூலகக் கட்டடத்துக்கான அடிக்கல் கடந்த 2010ஆம் ஆண்டு (சுமார் 16 வருடங்களுக்கு முன்னர் நாட்டப்பட்டது. எனினும், அதன் பின்னர் மாறி மாறி வந்த நான்கு அரசாங்கங்களால் முற்றுப்பெறாமல் முடங்கிக் கிடந்த இந்தத்திட்டத்தை, எப்படியாவது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர வேண்டும் என்பதில் தற்போதைய மட்டக்களப்பு மாநகரசபை முதல்வர் சிவம் பாக்கியநாதன் மிகுந்த அக்கறை காட்டினார். சுமார் 345 மில்லியன் ரூபா செலவில் கட்டி முடிக்கப்பட்ட இந்த நவீன நூலகக் கட்டடம், 2026 மே 20ஆம் திகதி ஜனாதிபதியால் பொதுமக்களின் பாவனைக்காக உத்தியோகபூர்வமாகத் திறந்துவைக்கப்பட்டது.



இந்நிகழ்வில் மிக முக்கியமான ஒரு நல்முன்மாதிரி அரங்கேறியுள்ளது. இங்கு நாட்டப்பட்டுள்ள நினைவுக் கல்லில் எவ்வித தனிநபர் பெயர்களும் இன்றி, 'பதவிப் பெயர்கள்' மாத்திரமே குறிப்பிடப்பட்டுள்ளன. பொதுமக்களின் வரிப்பணத்தில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்திகளுக்குத் தனிநபர்கள் உரிமை கொண்டாட முடியாது; மக்கள் பிரதிநிதிகள் தங்களின் பதவிக்காலத்தில் கடமையைச் செய்கிறார்கள் அவ்வளவுதான் என்ற உயர்ந்த அரசியலை இந்த நினைவுக்கல் பறைசாற்றுகிறது. இந்த ஆரோக்கியமான பண்பாடு ஏனைய இடங்களிலும் பின்பற்றப்பட வேண்டும்.

**சர்வதேசத் தரத்திலான நவீன வசதிகள்**

யாழ்ப்பாணப் பொதுசன நூலகத்தின் கட்டடக்கலை அமைப்பை ஓரளவு ஒத்திருக்கும் இந்நூலகம், முன்புறமும் பின்புறமும் பிரதான நுழைவாயில்களைக் கொண்டுள்ளது. முகப்பில் கல்வித் தெய்வமான சரஸ்வதியின் சிலை தத்ரூபமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. தமிழ் மற்றும் சிங்கள மொழிகளில் பெயர்ப்பலகை இடப்பட்டுள்ள போதிலும், சர்வதேச மொழியான ஆங்கிலம் விடுபட்டுள்ளது; அதுவும் விரைவில் சேர்க்கப்பட வேண்டியது அவசியமாகும்.

தற்போது பல்வேறு துறைகளைச் சார்ந்த சுமார் 85,000 நூல்களைத் தன்னுள் கொண்டுள்ள இந்த நவீன நூலகத்தில் பின்வரும் சிறப்பு வசதிகள் செய்யப்பட்டுள்ளன:

தொழில்நுட்பப் பூங்கா, புத்தாக்குநர் பகுதி
சிறார்களுக்கான விளையாட்டுச் செயற்பாட்டுப் பகுதி
ஆக்கத்திறன் மற்றும் கலந்துரையாடல் கூடங்கள்
இலவச எல்லையற்ற வைபை (WiFi) வசதி
கணினி, மடிக்கணினி பயன்பாடு மற்றும் நிழற்படப் பிரதி வசதிகள்.

தற்போது வரவேற்புப் பகுதியில் அழகிய ஓவியங்களும் சிற்பங்களும் அணிசெய்யும் நிலையில், கட்டடத்தின் 2ஆம், 3ஆம் தளங்களின் வேலைகள் முழுமையடைய வேண்டியுள்ளன. அங்கு அருங்காட்சியகம், பிரமாண்ட படிப்போர் மண்டபம் மற்றும் கேட்போர் கூடம் என்பன அமையவிருக்கின்றன.

'உலகளவில் வாசிப்புக் கலாசாரம் குறைந்து வரும் இவ்வேளையில், தமிழ் மக்கள் இன்னமும் வாசிப்பில் காட்டி வரும் ஆர்வம் பாராட்டத்தக்கது' என்று ஜனாதிபதி தனது திறப்புரை உரையில் குறிப்பிட்டு, புத்தகங்களை நேசிக்கும் எமது சமூகத்துக்கு அளிக்கப்பட்ட பெரும் அங்கீகாரமாகும்.

**அரசியல் கடந்த ஜனாதிபதியின் பெருந்தன்மை**

இந்நிகழ்வின் போது ஜனாதிபதி காட்டிய பெருந்தன்மை அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. மட்டக்களப்பு மாவட்டத்தின் தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஏனைய கட்சிப் பிரமுகர்களும் மேடையில் இருந்தபோதும், தற்போதைய நாடாளுமன்றத்தில் அங்கத்தவராக இல்லாத, வடமாகாணத்தைச் சேர்ந்த இலங்கைத் தமிழரசுக்கட்சியின் பதில் பொதுச்செயலாளர் எம். ஏ. சுமந்திரனைக் கண்டவுடன் ஜனாதிபதி தன்பக்கம் அழைத்தார். அவரிடம் கத்திரிக் கோலைக் கொடுத்துத் தொடக்க நாடாவை வெட்டச்செய்த எளிமை, 'நான் அதிகாரம் மிக்க தலைவன் அல்ல, சாதாரண மக்கள் தொண்டன்' என்பதை நிரூபிப்பதாக அமைந்ததுடன், இடதுசாரித் தத்துவத்தின் முற்போக்கு முகத்தையும் காட்டியது.

**கொடையாளர்களின் கவனத்திற்கு...**

'வாசிப்பு மனிதனைப் பூரணமாக்கும்' என்ற மகுட வாசகத்தைத் தாங்கி நிற்கும் இந்நூலகத்துக்குப் பழைய நூலகத்தின் புத்தகங்கள் யாவும் மாற்றப்பட்டுவிட்டன. எனினும், தற்கால உலகுக்கு ஈடுகொடுக்கும் வகையிலான புதிய புத்தகங்களின் தேவை இங்கு பெருமளவு காணப்படுகிறது. எனவே, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நன்கொடையாளர்கள் இந்த அறிவுப் பேழை இன்னும் செழிப்படையத் தரமான நூல்களை வாரி வழங்குவது காலத்தின் கட்டாயமாகும்.

நவீன மாற்றங்களோடு கிழக்கிலங்கைக்குக் கிடைத்துள்ள இந்த மாபெரும் அறிவுப் புதையலை எமது இளைய தலைமுறையினர் முழுமையாகப் பயன்படுத்தித் தங்களை வளர்த்துக்கொள்ள வேண்டும். இத்தகைய உயரிய நோக்குடன் செயலாற்றிய மட்டக்களப்பு மாநகர சபைக்குக் கிழக்கு வாழ் மக்கள் என்றும் நன்றிக்கடன் பட்டவர்களாவர்.

"புத்தகங்கள் மூலமே பழங்கருத்துகளையும் பாசிபடிந்த எண்ணங்களையும் போக்கி, நல்வாழ்வுக்கான நல்லறிவையும் புதுமைச் சிந்தனைகளையும் ஏற்படுத்த முடியும். எனது நூலகமே எனக்குப் போதிய பெரும் செல்வமாகும்" - வில்லியம் ஷேக்ஸ்பியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# செயற்கை நுண்ணறிவும் சமுதாயமும்

பகுதி -9


கடந்த வாரத் தொடர்ச்சி....

கலாநிதி மகேந்திரராஜா பிரவீணன்

கலாநிதி மகேந்திரராஜா பிரவீணன், அடிலெய்ட் பல்கலைக்கழகத்தில் கணினி அமைப்பியல் பொறியியல் துறையில் பட்டப்படிப்பை முதற்தர சித்தியுடன் நிறைவு செய்தார். அதன் பின்னர், மென்பொருள் பொறியியலாளராக குறுகிய காலம் பணியாற்றிய அவர், 2010ஆம் ஆண்டு சிட்னி பல்கலைக்கழகத்தின் தகவல் தொழில்நுட்பப் பள்ளியில் சிக்கலான வலையமைப்பு பகுப்பாய்வுத் துறையில் கலாநிதிப் பட்டத்தைப் பெற்றார். கணிப்பொறி, தொற்றுநோயியல் ஆராய்ச்சிக் கல்வியாளரான பிரவீணன் தற்போது சிட்னி பல்கலைக்கழகத்தில் கணினிப் பொறியியல் துறையின் இணைப்பேராசிரியராகக் கடமையாற்றுகின்றார்

## எதிர்ப்புநிலை இயந்திரக் கற்கை

எதிர்ப்புநிலைத் தாக்குதல்கள் படங்களை அடையாளம் காணும் அமைப்புகளுக்கு மட்டும் வரையறுக்கப்படவில்லை. அவை சமூக ஊடகங்கள், பரிந்துரை அமைப்புகள், உணர்வுப் பகுப்பாய்வு (sentiment analysis), மற்றும் பேசும் செயற்கை நுண்ணறிவு அமைப்புகளையும் பாதிக்கக்கூடும். போலிக் கணக்குகள், போலி மதிப்புரைகள், தவறான செய்திக் கட்டுரைகள், அல்லது ஒருங்கிணைக்கப்பட்ட சமூக ஊடக நடவடிக்கைகள் மூலம் இயந்திரக் கற்றல் அமைப்புகளைத் தவறாக வழிநடத்த முடியும். இதன் விளைவாக, பொதுமக்களின் கருத்துகள் திசைதிருப்பப்படலாம், தவறான தகவல்கள் பெருக்கப்படலாம், மற்றும் இணையத் தகவல்களின் மீதான நம்பிக்கை பாதிக்கப்படலாம்.




சுவாரஸ்யம் என்னவென்றால், எதிர்ப்புநிலை அணுகுமுறைகள் எப்போதும் தீங்கு விளைவிப்பவை அல்ல. எதிர்ப்புநிலைத் தொழிற்பாடுகள் கற்றலுக்கும் உதவலாம். இது ஒரு ஆசிரியர் வேண்டும் என்றே ஒரு மாணவனோடு வாதம் செய்து அவனது கற்றலுக்கு உதவிசெய்வது மாதிரி. சில சந்தர்ப்பங்களில், இந்த அணுகுமுறை மிகவும் சக்திவாய்ந்த புதிய தொழில்நுட்பங்களை உருவாக்க உதவியுள்ளது. அதற்கான மிகப் பிரபலமான எடுத்துக்காட்டு உருவாக்கி எதிர்நிலை வலையமைப்பு (Generative Adversarial Network - GAN) ஆகும். இதில் இரண்டு (செயற்கை) நரம்பு வலையமைப்புகள் ஒன்றோடொன்று போட்டியிடுகின்றன. முதலாவது அமைப்பான உருவாக்கி (generator), உண்மையான தரவுகளைப் போலத் தோன்றும் புதிய போலித் தரவுகளை உருவாக்க முயல்கிறது. இரண்டாவது அமைப்பான பகுத்தறிவி (discriminator), உண்மையான தரவுகளையும் உருவாக்கப்பட்ட போலித் தரவுகளையும் வேறுபடுத்த முயல்கிறது. அதாவது உருவாக்கி பகுத்தறிவியைப் பேய்க்காட்ட முயல, அந்தப் பேய்க்காட்டல்களைப் புரிந்துகொள்வதன் மூலமே பகுத்தறிவி நன்றாகக் கற்றுக்கொள்கிறது. இந்த உறவைப் புரிந்துகொள்வதற்காகப் போலி நாணயங்களை உருவாக்கும் ஒரு கள்ளநாணய உற்பத்தியாளரையும் அதைப் பிடிக்க முயலும் ஒரு விசாரணையாளரையும் எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம். விசாரணையாளரின் திறமை கூடும் போது, கள்ள நாணய உற்பத்தியாளரும் மேலும் திறமையாக மாறவேண்டும்; அதேபோல், கள்ள நாணயங்கள் மேலும் நம்பகமானதாக மாறும் போது விசாரணையாளரும் தனது திறனை மேம்படுத்த வேண்டும். இதனால் இறுதியில் இருவருமே தங்கள் வேலைகளில் மிகவும் கெட்டிக்காரர்கள் ஆகின்றனர். அதேபோல இந்தப் போட்டி தொடர்ச்சியாக நடைபெறுவதன் மூலம், உருவாக்கி மிக நம்பகமான செயற்கைத் தரவுகளை உருவாக்கக் கற்றுக்கொள்கிறது. பகுத்தறிவி பொய்த்தரவுகளைப் பிரித்தறியும் திறனை வளர்த்துக்கொள்கிறது.

ஆரம்பகால GAN அமைப்புகள் மங்கலான மற்றும் குறைபாடுகள் கொண்ட படங்களை உருவாக்கின. ஆனால் பின்னர் உருவாக்கப்பட்ட அமைப்புகள் நிஜ மனிதர்களைப் போலத் தோன்றும் முகங்களையும், கலைப்படைப்புகளையும், குரல்களையும், காணொளிகளையும் உருவாக்கும் அளவிற்கு முன்னேறின. இத்தொழில்நுட்பம் பட உருவாக்கம், மருத்துவப் படவியல், தரவு பெருக்கம், மற்றும் படைப்பாற்றல் கொண்ட AI பயன்பாடுகள் போன்ற பல துறைகளில் பயன்படுத்தப்படுகிறது. அதேவேளை, deepfake தொழில்நுட்பங்களுக்கும் இதுவே அடிப்படையாக அமைந்துள்ளது. இதனால், மிகவும் பயனுள்ள தொழில்நுட்பங்களும் தவறாகப் பயன்படுத்தப்படலாம் என்ற உண்மை மீண்டும் நினைவூட்டப்படுகிறது.

மொத்தத்தில், எதிர்ப்புநிலை இயந்திரக் கற்கை என்பது இயந்திரக் கற்றல் அமைப்புகளின் துல்லியத்தை மட்டும் அல்லாமல், அவற்றின் பாதுகாப்பு, நம்பகத்தன்மை, மற்றும் தாக்குதல்களை எதிர்கொள்ளும் திறன் ஆகியவற்றையும் ஆய்வு செய்யும் துறையாகும். தரவு நஞ்சாக்கப்படல், தவிர்ப்புத் தாக்குதல்கள், பின்கதவுத் தாக்குதல்கள், Byzantine தாக்குதல்கள், model extraction, model inversion, மற்றும் தவறான தகவல் பரப்புதல் போன்ற பல்வேறு தாக்குதல்கள், இயந்திரக் கற்றல் அமைப்புகளின் பல வீனங்களை வெளிப்படுத்துகின்றன. அதே நேரத்தில், உருவாக்கி எதிர்நிலை வலையமைப்புகள் போன்ற தொழில்நுட்பங்கள் எதிர்ப்புநிலை அணுகுமுறைகள் எவ்வாறு ஆக்கபூர்வமான முன்னேற்றங்களுக்கும் வழிவகுக்க முடியும் என்பதையும் காட்டுகின்றன. செயற்கை நுண்ணறிவு அமைப்புகள் சமூகத்தின் அனைத்துத் துறைகளிலும் அதிகமாகப் பயன்படுத்தப்படுகின்ற இக்காலத்தில், அவற்றை பாதுகாப்பாகவும் நம்பகமாகவும் வடிவமைப்பது செயற்கை நுண்ணறிவின் மிக முக்கியமான சவால்களில் ஒன்றாக மாறியுள்ளது.

இந்த வருடத்தில் சிட்னிப் பல்கலைக்கழகத்தில் (முதுநிலைப் பட்ட மாணவர்களுக்கு) நான் கற்பிக்கும் பாடங்களில் ஒன்று Artificial Intelligence and Society: செயற்கை நுண்ணறிவும் சமுதாயமும். இந்தப் பாடமும் இதன் உள்ளடக்கமும் பொதுவாக எமது மக்களுக்கு ஆர்வமான ஒரு விடயமாக இக்காலத்தில் இருக்கலாம் என்ற எண்ணம் எனக்கு எழுந்தது. ஆகவே ஒவ்வொரு வார விரிவுரையையும் சுருக்கமாகத் தமிழில் எழுதலாம் என்று எண்ணினேன். இது இரண்டு மணிநேர விரிவுரையின் சுருக்கம் மட்டுமே. விரும்பியோர் வாசித்துப் பயன்பெறுக.

தொடரும்..

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.media



# அமெரிக்கா-ஈரான் போர்க்களமும் புவிசார் பூகம்பமும்!



○ சபாலிங்கம் பிரசன்னா

சர்வதேச அரசியலின் அதிகார மையமாகவும், உலகளாவிய எரிசக்தி வர்த்தகத்தின் மூலோபாயப் புள்ளியாகவும் விளங்கும் மத்திய கிழக்குப் பிராந்தியம், எப்போதுமே உலக வரலாற்றின் திசையைத் தீர்மானிக்கும் ஒரு முக்கிய திருப்புமுனையாகவே இருந்து வந்துள்ளது. குறிப்பாக, அமெரிக்காவிற்கும் ஈரானுக்கும் இடையிலான பல தசாப்த கால அரசியல் முரண்பாடுகள் மற்றும் இராஜதந்திர மோதல்கள் உலக அமைதிக்குத் தொடர்ச்சியான அச்சுறுத்தலாக விளங்குகின்றன. வல்லரசு நாடான அமெரிக்காவின் உலகளாவிய ஆதிக்க உத்திகளும், ஈரானின் பிராந்திய செல்வாக்கு மற்றும் அணுசக்திசார் நிலைப்பாடுகளும் இரு நாடுகளுக்கும் இடையிலான பதற்றத்தை உச்சக்கட்டத்திற்கு கொண்டு சென்றுள்ளன. இவ்வாறானதொரு பின்னணியில், ஈரான் மற்றும் அமெரிக்காவிற்கு இடையே ஏற்படக்கூடிய ஒரு நேரடிப் போர் என்பது இரு நாடுகளுக்குள் மட்டும் சுருங்கிவிடக் கூடியதொன்றல்ல; அது ஒட்டுமொத்த சர்வதேச சமூகத்தையும், குறிப்பாக வளர்ந்து வரும் நாடுகளை ஆழமாக பாதிக்கக்கூடிய பன்முக விளைவுகளைக் கொண்டதாகும்.

நவீன உலகமயமாக்கல் சூழலில் நாடுகள் அனைத்தும் ஒன்றிலொன்று தங்கியுள்ளதால், இந்த மோதல்கள் உலகளாவிய பொருளாதாரம், எரிசக்தி, பாதுகாப்பு, புவிசார் அரசியல் கூட்டணிகள் மற்றும் மனிதநேய ஒழுங்கமைப்பில் கடுமையான பேரழிவுத் தாக்கங்களை ஏற்படுத்தவல்லது. எனவே, ஈரான்அமெரிக்கா போர்ச்சூழல் உலக நாடுகளின் மீது எத்தகைய தாக்கங்களை ஏற்படுத்தும் என்பதையும், சர்வதேச சமூகம் எதிர்கொள்ளவிருக்கும் சவால்களையும் சமகாலத் தரவுகளின் அடிப்படையில் விரிவாக ஆராய்வதே இந்தக்கட்டுரையின் முதன்மை நோக்கமாகும்.

**1. உலகளாவிய பொருளாதாரப் பேரழிவும் வர்த்தக முடக்கமும்**

சர்வதேச சமூகமானது ஈரான் அமெரிக்க போரினால் எதிர்கொள்ளும் முதலாவதும் மிகத் தீவிரமானதுமான சவால், உலகளாவிய பொருளாதாரப் பேரழிவாகும். நவீன உலகமயமாக்கல் சூழலில் நாடுகள் அனைத்தும் சர்வதேச வர்த்தகம் மற்றும் எரிசக்தி விநியோகம் ஊடாக பரஸ்பரம் சார்ந்துள்ளதால், இப்போரின் விளைவுகள் சர்வதேச சந்தையை உடனடியாக உலுக்கியுள்ளன. சர்வதேச அமைதி நிறுவனம் போன்ற அமைப்புகளின் ஆரம்பக் கட்ட கணிப்புகளின்படி, இப்போரின் நேரடி விளைவாக உலகப் பொருளாதாரத்திற்குச் சுமார் 2.2 டிரில்லியன் டொலர் இழப்பு ஏற்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதன் காரணமாகவே, உலகளாவிய பொருளாதார வளர்ச்சி விகிதம் அதிரடியாக 2.5% ஆகக் குறைக்கப்பட்டுள்ளதாக சர்வதேச நிதியியல் செய்திகள் சுட்டிக்காட்டுகின்றன.

இந்த விபரீதப் பொருளாதார முடக்கத்திற்கு முதன்மை காரணியாக விளங்குவது உலகக் கச்சா எண்ணெய் போக்குவரத்தின் இதயமாகக் கருதப்படும் ஹார்முஸ் நீரிணை ஆகும். உலகளாவிய கடல் வழி எண்ணெய் வர்த்தகத்தில் சுமார் 20% பகுதியும், திரவமாக்கப்பட்ட இயற்கை எரிவாயுவில் கணிசமான பகுதியும் இந்த குறுகிய நீரிணை வழியாகவே கொண்டு செல்லப்படுகின்றன. இப்போர்த்தூழலில் ஏற்பட்ட விநியோகத் தடைகளால் உலகளாவிய எண்ணெய் விநியோகம் 20% வரை பாதிக்கப்பட்டுள்ளதுடன், தினசரி எண்ணெய் உற்பத்தி 10 மில்லியன் பேரல் வரை சரிவடைந்துள்ளது. இதன் நேரடி விளைவாக, உலகச் சந்தையில் பிரெண்ட் (Brent) கச்சா எண்ணெயின் விலை ஒரு பேரலுக்கு 70 டொலரிலிருந்து 93 டொலராக அதிரடியாக அதிகரித்துள்ளது.

இத்தகைய திடீர் எரிசக்தி அதிர்ச்சியானது கடல்வழி வர்த்தகப் பாதைகளை ஆபத்தானதாக மாற்றியுள்ளதால், கப்பல்களுக்கான போர் அபாயக் காப்பீட்டுத் தொகை 500% வரை உயர்ந்து, உலகளாவிய விநியோகச் சங்கிலியை முற்றாக முடக்கியுள்ளது. இவ்வர்த்தக முடக்கம் மற்றும் உற்பத்திச் செலவு உயர்வு காரணமாக, சர்வதேச சந்தையில் விவசாயத்திற்கான உர விலை 47% வரை அதிகரித்துள்ளதாக உலகளாவிய வெளியீடுகள் குறிப்பிடுகின்றன. இது வளர்ந்து வரும் நாடுகளின் விவசாயத் துறையை நேரடியாகப் பாதித்து, உலகளாவிய ரீதியில் ஒரு கட்டுக்கடங்காத செலவு தூண்டல் பணவீக்கத்தை தோற்றுவித்துள்ளது.

நிதிச் சந்தைகளைப் பொறுத்தவரை, போரினால் ஏற்பட்டுள்ள நிச்சயமற்ற தன்மையால் வளைகுடா நாடுகளுக்கு ஏற்பட்டுள்ள ஒட்டுமொத்த பொருளாதார இழப்பு மாத்திரம் 120 பில்லியன் டொலரைத் தாண்டியுள்ளது. விசேடமாக, பிராந்திய நிதி மையங்களில் ஒன்றான குவைத் பங்குச் சந்தை குறியீடு 10% வரை சரிவடைந்து, சுமார் 25 பில்லியன் டொலர் சந்தை மதிப்பை இழந்துள்ளது. முதலீட்டாளர்கள் ஆபத்தான சந்தைகளில் இருந்து தங்களது முதலீடுகளைத் திரும்பப் பெற்று, பாதுகாப்பான தங்க நாணய மாற்று முதலீடுகளைச் செய்யத் தொடங்கியுள்ளதால், அமெரிக்க டொலருக்கு நிகரான ஏனைய வளர்ந்து வரும் நாடுகளின் நாணய மதிப்புகளும் பலவீனமடைந்துள்ளன.

மேலும், பாதுகாப்பு ஏவுகணைகளைப் பயன்படுத்தியதற்கான இராணுவச் செலவு மட்டுமே இதுவரை 8 முதல் 12 பில்லியன் டொலர் வரை எட்டியுள்ளதுடன், அமெரிக்காவின் நேரடிச் செயல்பாட்டுச் செலவு 29 பில்லியன் டொலராகப் பதிவாகியுள்ளது. எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்கள் மற்றும் வான்வழித் தடங்கள் மீதான தாக்குதல்களால் ஏற்பட்ட உட்கட்டமைப்புச் சேத மதிப்பு 15 முதல் 20 பில்லியன் டொலர் என மதிப்பிடப்பட்டுள்ளது. ஒட்டுமொத்தமாகப் பார்க்கும் போது, இந்தச் சங்கிலித் தாக்கமானது உலக நாடுகள் அனைத்தையும் ஒரு நீண்டகால பொருளாதார மந்தநிலையை (Global Recession) நோக்கித் தள்ளியுள்ளது.

**2. புவிசார் அரசியல் அதிர்வுகளும் புதிய கூட்டணி உடைவுகளும்**

மத்திய கிழக்கில் வெடித்துள்ள நேரடி இராணுவ மோதலானது உலகளாவிய புவிசார் அரசியலில் பாரிய பூகம்பத்தை ஏற்படுத்தியுள்ளது. நவீன சர்வதேச அரசியல் தத்துவங்களின்படி, இத்தகைய இருதரப்பு முரண்பாடு என்பது வெறும் இரு நாட்டு எல்லைக்குள் சுருங்கிவிடுவதில்லை; மாறாக, உலக வல்லரசுகளின் நேரடி மற்றும் மறைமுகப் பங்களிப்புடன் இது ஒட்டுமொத்த உலக ஒழுங்கமைப்பையும் புதியதொரு 'இருதுருவ முனைப்பை' நோக்கி மாற்றியமைக்கும் வல்லமை கொண்டது.

ஆசிய மூலோபாய அச்சு (The Asian Axis): அமெரிக்காவின் கடுமையான இராணுவ மற்றும் பொருளாதாரத் தடைகளுக்கு ஆளாகியுள்ள ஈரான், தன்னைத் தற்காத்துக் கொள்ளும் நோக்கில் சீனா மற்றும் ரஷ்யா ஆகிய ஆசிய வல்லரசுகளுடன் மிக நெருக்கமான மூலோபாய மற்றும் இராணுவக் கூட்டணியைப் பலப்படுத்தியுள்ளது. ரஷ்யாவின் அதிநவீன இராணுவத் தொழில்நுட்ப உதவியும், ஈரானின் எண்ணெய் வளத்தைப் பாதுகாப்பதற்கான சீனாவின் நீண்டகால பொருளாதார முதலீடுகளும் இணைந்து மேற்கத்திய நாடுகளின் ஆதிக்கத்திற்குச் சவாலான ஒரு பலத்த ஆசியக் கூட்டணியை உருவாக்கியுள்ளன. இது உலகை மீண்டும் ஒரு புதிய பனிப்போர் சூழலுக்குள் தள்ளியுள்ளது. பினாமிப் போர்களும் இஸ்ரேலின் நிலையும்: ஈரான் தனது பிராந்திய ஆயுதக் குழுக்களை ஒருங்கிணைத்து, அமெரிக்கா மற்றும் அதன் நட்பு நாடுகளுக்கு எதிராகப் பயன்படுத்தி வருகிறது. லெபனானின் ஹிஸ்புல்லா, யேமனின் ஹூதிக்கள் மற்றும் ஈராக்கில் உள்ள சியா ஆயுதக் குழுக்களின் செயல்பாடுகள் பலமடைந்துள்ளன. குறிப்பாகச் செங்கடல் மற்றும் ஏடன் வளைகுடா பகுதிகளில் ஹூதிக்கள் நடத்தும் ஏவுகணைத் தாக்குதல்கள் சர்வதேச கடல்வழிப் பாதுகாப்பை முற்றாக அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கியுள்ளன. அமெரிக்காவின் மிக முக்கியமான மூலோபாய நட்பு நாடான இஸ்ரேல் இப்போரினால் நேரடி அச்சுறுத்தலைச் சந்தித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# உலக நாடுகளை அதிர வைத்த சீனாவின் அணுசக்தி ஏவுகணை

பீஜிங், ஜூலை 8

**பசுபிக் பெருங்கடலில் அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பலில் இருந்து கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணையை சீனா நேற்றுமுன்தினம் வெற்றிகரமாகச் சோதனை செய்துள்ளது.**

சீனாவின் வடக்குப் பகுதியில் உள்ள கடற்பகுதியில் இருந்து இந்த ஏவுகணை ஏவப்பட்டது. அங்கிருந்து தென் பசுபிக் கடற்பகுதியில் உள்ள இலக்கை ஏவுகணை அடைந்தது.

இந்த வகை ஏவுகணைகள் ஆயிரக் கணக்கான கிலோமீற்றர் தூரத்தில் உள்ள இலக்குகளைத் தாக்கும் திறன் கொண்டவை எனக் கருதப் படுகின்றன. இந்த ஏவுகணை சோதனைக்கு ஜப்பான், அவுஸ்திரேலியா, நியூசிலாந்து மற்றும் தாய்வான் ஆகிய நாடுகளும் கவலை தெரிவித்துள்ளன. குறுகிய முன்னறிவிப்புடன் இத்தகைய மூலோபாய ஏவுகணைச் சோதனைகளை நடத்துவது இந்தோ-பசுபிக் பிராந்தியத்தின் பாதுகாப்பு மற்றும் நிலைத்தன்மைக்கு பாதிப்பை ஏற்படுத்தக்கூடும் என அந்நாடுகள் எச்சரித்துள்ளன.

சீனா நடத்திய இந்தச் சோதனை குறித்து அமெரிக்க வெளியுறவுத் துறைச் செய்தித் தொடர்பாளர் டாமி பிகாட் கூறுகையில், ஆயுதமற்ற கண்டம் விட்டு கண்டம் பாயும் பாலிஸ்டிக் ஏவுகணையை நீர்மூழ்கிக் கப்பலில் இருந்து சீனா சோதனை முறையில் ஏவியதை அமெரிக்கா கண்காணித்தது. அது தெற்கு பசுபிக் பெருங்கடலில் விழுந்தது. மேலும் அணு ஆயுதப் பரவலைத் தடுக்க அமெரிக்கா முன்பை விடக் கடுமையாக உழைத்து வரும் வேளையில், சீனா அதற்கு நேர்மாறாகச் செயற்படுகிறது. பீஜிங்கின் வேகமான மற்றும் வெளிப்படையற்ற அணு ஆயுதக் குவிப்பு, இந்தோ-பசுபிக் பிராந்தியத்திற்கும் உலகுக்கும் பெரும் கவலையை அளிக்கிறது - என்றார். (ச-இ)

# ஹமாஸ் அரசாங்கம் காசாவில் கலைந்தது



காசா, ஜூலை 8

காசாவை ஏறக்குறைய இரண்டு தசாப்தங்களாக நிர்வகித்துவந்த பலஸ்தீன அமைப்பான ஹமாஸ் தங்கள் அரசைக் கலைப்பதாக அறிவித்துள்ளது.

இதன் மூலம், போரினால் பாதிக்கப்பட்ட மற்றும் முற்றுகையிடப்பட்ட பகுதியில் பொது நிர்வாகத்தை செயற்படுத்த ஒரு தொழில்நுட்ப நிபுணர்கள் குழு அமைப்பதற்கான வழிவகை செய்யப்பட்டுள்ளது. கடந்த ஒக்ரோபர் மாதம் காசாவில் இஸ்ரேலுடனான அமெரிக்க மத்தியஸ்தத்திலான 'போர்நிறுத்தம்' நடைமுறைக்கு வந்ததில் இருந்து, அன்றாட நிர்வாகப் பொறுப்புகளில் இருந்து விலகத் தயாராக இருப்பதாக ஹமாஸ் அமைப்பு பலமுறை கூறியுள்ளது. இந்த நிலையில் ஒப்புக்கொள்ளப்பட்ட ஏற்பாடுகளைச் செயற்படுத்துதல், நிர்வாக மாற்றச் செயல்முறையை எளிதாக்குதல் மற்றும் இந்த நடவடிக்கைகளின் தீவிரத்தை வெளிப்படுத்துதல் ஆகியவற்றின் ஒரு பகுதியாக, அரசாங்கத்தின் அவசரநிலைக் குழுவின் தலைவர் முகமது அல் பர்ரா தனது பதவியில் இருந்து விலகவும், அந்தக் குழுவை கலைக்கவும் முடிவு செய்துள்ளார்" என்று காசாவின் அரசு ஊடக அலுவலகம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஹமாஸ் முடிவு: பாலஸ்தீன பகுதி மீதான இஸ்ரேலின் இனப்படுகொலை போன்ற போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான அமெரிக்க ஆதரவுத் திட்டத்தின்கீழ், காசாவின் எதிர்கால நிர்வாகத்தைக் கண்காணிக்கும் பொறுப்பைக் கொண்ட 'காசா நிர்வாகத்திற்கான தேசியக் குழு' விரைவாக செயற்படத் தொடங்கவேண்டும்என்றுஹமாஸ்விரும்புவதாக அதன் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ச-இ)



# பொதுவெளியில்தோன்றிய கமேனியில் 3 மகன்கள்

தெஹ்ரான், ஜூலை 8

ஈரானின், மறைந்த ஆன்மிகத் தலைவர் கமேனியின் மூன்று மகன்கள் முதன்முறையாகப் பொதுவெளியில் தோன்றியுள்ளனர்.

அமெரிக்க-இஸ்ரேல் வான்வழித் தாக்குதலில் கொல்லப்பட்ட ஈரானின் ஆன்மிக மற்றும் உச்ச தலைவரான அயதுல்லா அலி கமேனியின் உடல், தலைநகர் தெஹ்ரானில் உள்ள பிரமாண்ட மொசல்லா வளாகத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது. இலட்சக்கணக்கான மக்கள் திரண்டு கண்ணீர் அஞ்சலி செலுத்தி வரும் இறுதிச்சடங்கில், கமேனியின் மூன்று மகன்கள் முதன்முறையாகப் பொதுவெளியில் தோன்றி தமது தந்தைக்கு அஞ்சலி செலுத்தியுள்ளனர். இதேவேளை தந்தையின் மரணத்துக்குப் பிறகு ஈரானின் புதிய உச்ச தலைவராகப் பொறுப்பேற்றுள்ள அவரது மற்றொரு மகனான மொஜ்தபா கமேனி இறுதிப் பிரார்த்தனையில் கலந்துகொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)

# பிரான்ஸில் காட்டுத்தீ; மக்கள் வெளியேற்றம்

பிரான்ஸ், ஜூலை 8

பிரான்ஸின் தெற்குப் பகுதியில் ஏற்பட்டுள்ள பயங்கர காட்டுத்தீயால் பல்லாயிரக்கணக்கான மக்கள் தங்கள் வீடுகளை விட்டு அவசரமாக வெளியேற்றப்பட்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. பெர்பிக்னான் நகருக்கு அருகிலுள்ள ட்ரெவிலாக் பகுதியில் பரவியுள்ள இந்த காட்டுத்தீ, இதுவரை 4,600 ஹெக்ரேயருக்கும் அதிகமான பரப்பளவைச் சாம்பலாக்கியுள்ளது. பலத்த காற்று வீசி வருவதன் காரணமாகக் காட்டுத்தீ குடியிருப்புப் பகுதிகளை நோக்கி மிக அதிவேகமாகப் பரவி வருவதாகக் கூறப்படுகின்றது. ஸ்பெயினிலும் இந்தக் காட்டுத்தீயின் தாக்கம் அதிகரித்துள்ளது.

காலநிலை மாற்றத்தின் தீவிர விளைவாக, உலகிலேயே ஐரோப்பாக் கண்டம் தான் உலகளாவிய சராசரியை விட இரண்டு மடங்கு அதிவேகமாக வெப்பமடைந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)




# மைக்ரோசொப்ட் நிறுவனத்தில் 4,800 பேர் பணிநீக்கம்

அமெரிக்கா, ஜூலை 8

மைக்ரோசொப்ட் நிறுவனம் தனது ஊழியர்களில் 4,800 பேரை பணிநீக்கம் செய்யப்போவதாக அறிவித்துள்ளது.

மெட்டா நிறுவனம் சமீபத்தில் 8 ஆயிரம் பேரை பணி நீக்கம் செய்திருந்தது. அமேசன் நிறுவனமும் ஆட்குறைப்பில் ஈடுபட்டது.

மைக்ரோசோப்ட் நிறுவனமும் இந்த ஆண்டு தொடக்கத்தில் 9 ஆயிரம் பேர் தாமாக முன்வந்து பணியில் இருந்து விலகும் வாய்ப்பை வழங்கி இருந்தது.

தற்போது, இந்தாண்டின் முதல் ஆறு மாதங்களில் அந்த நிறுவனத்தின் பங்குகள் கடுமையாக சரிந்துள்ளன. இந்த நிலையில், 4,800 ஊழியர்களை பணியில் இருந்து நீக்கப்போவதாக அறிவித்துள்ளது. (ச-இ)

# கச்சா எண்ணெய் விலை சரிவு

தெஹ்ரான், ஜூலை 8

உலக சந்தையில் கச்சா எண்ணெய் விலை மேலும் சரிந்துள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. ஹோர்மூஸ் நீரிணை ஊடாக மீண்டும் வழமை போல எண்ணெய் ஏற்றுமதி ஆரம்பிக்கப்பட்டுள்ளமையே இந்த விலைச் சரிவுக்குக் காரணமாகும். இதன்படி, ஒரு பீப்பாய் 'பிரெண்ட்' கச்சா எண்ணெயின் விலை 71.78 அமெரிக்க டொலராகவும், ஒரு பீப்பாய் அமெரிக்க 'டபிள்யூ.டி.ஐ.' கச்சா எண்ணெயின் விலை 68.48 அமெரிக்க டொலராகவும் பதிவாகியுள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




# மாணவர் தலைவர்களுக்கு விழிப்பூட்டல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூலை 8

யாழ்ப்பாண YMCA அமைப்பின் ஏற்பாட்டில், பாடசாலை மாணவர் தலைவர்களுக் கான விசேட விழிப்பூட்டல் கருத்தரங்கு YMCA வளாகத்தில் அண்மையில் நடை பெற்றது.

இதில் தலைமைத்துவத்தின் மூலம் நேர்மறையான பாடசாலைக் கலாசாரத்தை உருவாக்குதல், மாணவர்களிடையே போதைப்பொருள் பாவனையைத் தடுத்தல், பிளாஸ்ரிக் கழிவுகளைக் குறைத்து சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதில் மாணவர் தலை வர்களின் பங்கு ஆகியவை தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டது.

மாணவர் தலைவர்களின் தலைமைத்துவத் திறன்களை மேம்படுத்துவதோடு, பாட சாலைகளில் நல்லிணக்கம் மற்றும் ஒழுக்கமான கலாசாரத்தை உருவாக்குதல், போதைப்பொருள் பாவனையைத் தடுப்பதற்கான விழிப்புணர்வை ஏற்படுத்துதல், மேலும் சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதில் மாணவர்களின் பொறுப்புணர்வை வலுப் படுத்துதல் ஆகியன இந்தக் கருத்தரங்கின் நோக்கமாகும். இதில் 8 பாடசாலை களைச் சேர்ந்த சுமார் 35 மாணவர் தலைவர்கள் பங்கேற்றனர். (க)



எழுதுமட்டுவாழ் ஸ்ரீகணேசா வித்தியாலய மாணவர் தலைவர் களுக்கு சின்னம் சூட்டும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. அதிபர் ச.துளசிதாசன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளரும் சிறப்பு விருந்தினராக வித்தியாலய முன்னாள் அதிபர் சோ.ஸ்ரீகாந்தனும் கலந்துகொண்டனர். (ச-9)



வடக்கு மாகாண தொழிற்றுறைத் திணைக் களத்தின் ஏற்பாட்டில், உடுவில் பிரதேச செயலகத்தில் மாதாந்தம் நடைபெற்றுவரும் ஜூன் மாதத்துக்கான சந்தை, பிரதேச செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. (க)


## மரண அறிவித்தல்

அன்னை மடியில் 15 . 11 . 1939



இறைவனின் அடியில் 27 . 06 . 2026

### ஜெகதீஸ்வரி இராமகிருஷ்ண சர்மா

மணற்காடு காரைநகரை பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் நீராவியடியை வசிப்பிடமாகவும், ஜேர்மனி சுவைற்றா (Schwerte), மற்றும் பிராங்பேர்ட் (Frankfurt am Main) நகரை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட ஸ்ரீமதி ஜெகதீஸ்வரி இராமகிருஷ்ண சர்மா அவர்கள் கடந்த 27.06.2026 சனிக்கிழமை அன்று சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சிவசர்மா சாரதம்பாள் அவர்களின் சிரேஷ்டபுத்திரியும், காலம்சென்றவர்களான சுருவில் நடராஜக் குருக்கள் யோகம்பாள் தம்பதியரின் மருமகளும், இராமகிருஷ்ண சர்மா (முன்னாள் முகாமையாளர் நோர்தேன் இண்டஸ்ரீஸ் (பிறைவேட்) லிமிட்டட்) அவர்களின் அன்புத் துணைவியாரும், சசிகலா (இந்தியா), சசிதரக்குருக்கள் (சுவிஸ்), முரளிதரக்குருக்கள் (ஜேர்மனி), சசிரேகா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும், கிரிதரசர்மா (இந்தியா), பானு சைலஜா (சுவிஸ்), கவிதா (ஜேர்மனி), கிருபாகரசர்மா (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியாரும், தேவப்பிரகாஷ், அருண்பிரசாத், கனகதாரணி (இலண்டன்), சபரிஹா, சபரீசன், சபரி கிரிசன், ஜெய்ராம் ஜெய்ஷிகா, சாய்ராம், சாய்மீரா ஆகியோரின் பாசமிகு பாட்டியாரும், மஹிமா, மஹதி, அதிதி, ஆதவ், ஆகாஷ் ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.07.2026) வியாழக்கிழமை ஜேர்மனியில் நடைபெறும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சசிதரக்குருக்கள் (சுவிஸ்) Tel,+Whatsapp:0041787482879
முரளிதரக்குருக்கள் (ஜேர்மனி) Tel,+Whatsapp:004917664706817
(CS 32108) A




# மென்பந்துச் சுற்றுத்தொடரில் யாழ். மாவட்ட அணி சம்பியன்

யாழ்ப்பாணம், ஜூலை 8

மானிப்பாய் காளி விளையாட்டுக்கழகத்தின் ஏற்பாட்டில், 24 அரச திணைக்கள அணிகள் பங்கேற்ற மென்பந்து கிரிக்கெட் போட்டித் தொட ரின் இறுதிப்போட்டியில், யாழ். மாவட்டச் செயலக அணி சம்பியனானது. காங்கேசன்துறை பொலிஸ் அணியுடன் நடைபெற்ற போட்டியில் யாழ். மாவட்டச் செயலக அணி சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி, சம்பியன் பட்டத்தைத் தனதாக்கிக் கொண்டது.

யாழ்.மாவட்டச் செயலக அணி தொடர்ச்சியாக 6 போட்டிகளில் வெற்றிபெற்று இறுதிப்போட்டிக்குத் தகுதி பெற்றிருந்தது.

குறித்த அணியினர் யாழ். மாவட்டச் செயலர் மருதலிங்கம் பிரதீபனைச் சந்தித்துக் கலந்துரையாடியதுடன், வெற்றிக்கிண்ணத்தை அவரிடம் ஒப்படைத்தனர்.

இதன்போது மேலதிக மாவட்டச் செயலர் க. சிவகரன் மற்றும் உதவி மாவட்டச் செயலாளர் செல்வி. உ.தர்ஷினி ஆகியோர் கலந்துகொண்ட னர். (க)


## மரண அறிவித்தல்

தோற்றம் 09 . 03 . 1952



மறைவு 06 . 07 . 2026

### விநாயகமூர்த்தி தவமணி

மட்டக்களப்பை பிறப்பிடமாகவும் இல.43/2, சோமசுந்தரம் அவனியூ, சுண்டுக்குளி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட விநாயகமூர்த்தி தவமணி கடந்த 06.07.2026 திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்வராசா மனோன்மணி தம்பதியரின் மகளும், காலஞ்சென்ற பூபாலப்பிள்ளை அன்னம்மா தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற விநாயகமூர்த்தியின் அன்பு மனைவியும், லோகேஸ்வரன் (பாபு), மஞ்சுளா, கவிதா ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஷிராந்தினி, உமேஷ்காந், வத்சாயினி, விஜய்காந் ஆகியோரின் சிறிய தாயாரும், கிறிஸ்ரினா, மெலனி ஆகியோரின் பெரிய தாயாரும், தேம்பாமலர் (மலர்), செல்வராணி ஆகியோரின் சகோதரியும், குகப்பிரியா, புஸ்பராசா (பாலா), சுரேஸ்குமார், சுதன், எக்ஸிபா, கோபிநாத், நூரியா ஆகியோரின் மாமியாரும், ஜெகநாதன், ரோமிகுமாரசாமி ஆகியோரின் மைத்துனியும், ஹரீஸ், பிரஷாயினி, அனுசன், ரதீசன், தர்சாயினி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.07.2026) வியாழக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
077 9277643
(CS 32111) A


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## நடப்பாண்டில்

# வாகன விபத்துகளால் 1,424 பேர் உயிரிழப்பு

கொழும்பு, ஜுலை 8

இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்துகளில் 1,424 பேர் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து பொலிஸ் போக்குவரத்து மற்றும் வீதி பாதுகாப்புப் பிரிவின் பணிப்பாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மனோஜ் ரணகல தெரிவிக்கையில்,

ஜனவரி முதலாம் திகதி முதல் ஜூலை 5ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் 1,355 உயிராபத்துகளை ஏற்படுத்தும் விபத்துகள் பதிவாகியுள்ளன.

2025 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில், இம்முறை மொத்த வீதி விபத்துகளின் எண்ணிக்கை 108 ஆகவும், உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 110 ஆகவும் அதிகரித்துள்ளது. இது மிகவும் பாரதூரமான நிலை.

வீதி விபத்துகள் நாளுக்கு நாள் அதிகரிப்பதற்கு சாரதிகளின் கவனவீனம், அதிக வேகம், வீதிகளில் காணப்படும் குறைபாடுகள் மற்றும் வாகனங்களைச் சரியாகப் பராமரிக்காமை காரணமாக ஏற்படும் தொழில்நுட்பக் கோளாறுகள் ஆகியவை பிரதான காரணங்களாகும் - என்றார். (ச-இ)

### யாழ்ப்பாணச்...

உட்பட 27 பேர் உயிரிழந்ததுடன் 150க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். இதையடுத்து, நீர்கொழும்புச் சிறைச்சாலையில் இருந்த கைதிகள் நாட்டின் ஏனைய சிறைச்சாலைகளுக்கு மாற்றப்பட்டு வருகின்றனர். இதன் ஒரு பகுதியாகவே 60 கைதிகள் யாழ்ப்பாணம் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர். (அ-ம-26)

### காணாமல்...

யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கு கிழக்கு உள்ளிட்ட தமிழர் தாயகப்பகுதிகளிலும், இலங்கையின் ஏனைய பகுதிகளிலும் நூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர்களும், யுவதிகளும் அரச படைகளாலும் துணை இராணுவக் குழுக்களாலும் கடத்தப்பட்டுள்ளனர். இந்தத் துயர் தோய்ந்த வரலாறு 1948ஆம் ஆண்டிலிருந்தே ஆரம்பிக்கின்றது. ஆனால் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்று இலங்கை அரசாங்கம் இதுவரை வெளிப்படுத்தவில்லை.

விசாரணை என்கிற பெயரில் திருடனே குற்றவாளியைத் தேடும் படலத்தை அரசாங்கம் அரங்கேற்றி வருகின்றது. நீதிகோரும் மக்களையும், சர்வதேசத்தையும் ஏமாற்றும் நோக்குடன் முன்னெடுக்கப்படும் இந்தச் செயற்பாடுகள் தொடர்பில் எமது அதிருப்தியை நாம் வெளிப்படுத்தியே வந்திருக்கின்றோம். தற்போது ஆட்சியிலுள்ள தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் கடந்த அரசாங்கங்களைக் காட்டிலும் மிகவும் தந்திரோபாயமான முறையில் எமது விடயத்தைக் கையாள்வதை அவதானிக்க முடிகின்றது.

தெற்கில் சிங்கள இளைஞர்களும் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். வடக்கு - கிழக்கில் தமிழ் இளையோர் காணாமலாக்கப்பட்டுள்ளனர்.

எனவே தெற்கோடு கைகோர்த்து இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண்போம் என்கின்றனர். அடிப்படையில் அறமற்ற இந்த வாதம், எமது கண்ணீரை விலை பேசுகிறது. எமது பிள்ளைகளைப் பறிகொடுத்துவிட்டு நாம் இழப்பீட்டையோ அல்லது அரச வேலை வாய்ப்புகளையோ பெற்றுக்கொண்டு மரணச் சான்றிதழில் கையெழுத்திடத் தயாரில்லை. ஆனால் தெற்கு அதனை எப்போதோ செய்துவிட்டது. நாம் எமது பிள்ளைகள் எங்கே என்றே கேட்கிறோம்.

செம்மணி போன்ற மனிதப் புதைகுழிகளைக்காட்டி, கடந்த காலங்களில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் கொன்று புதைக்கப்பட்டிருக்கலாம். எனவே அரசு வழங்கும் இழப்பீட்டைப் பெறுங்கள் என எம்மைத் தள்ளிவிடும் உளவியல் போரை இந்த அரசு நடத்தி வருகின்றது. நீதிகோரிப் போராடிய பெற்றோரில் இதுவரை 400க்கும் மேற்பட்டோர் நீதி கிடைக்காமல் இறந்து விட்டனர். அவர்களின் இறப்பின் பின்னர் காணாமல் ஆக்கப்பட்டவர்களைத் தேடும் வீச்சும் குறைந்து வருகின்றது.

இவ்வாறானதொரு நிலையில்தான் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் விடயத்தில் இலங்கை அரசின் பொறிமுறைகளை நிராகரித்து சர்வதேச நீதியைக் கோரும் நிகழ்வாக இவ்வருட சர்வதேச வலிந்து காணாமலாக்கப்பட்டோர் தினத்தைக் கடைப்பிடிக்கவுள்ளோம். இதில் எவ்வித பேதமும் இன்றி அனைவரும் பங்கெடுக்க வேண்டும் - என்றனர். (அ-ம-26)

### சிறைக்...

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நீர்கொழும்பு சிறைச்சாலையில் ஏற்பட்ட கலவரத்தால் இலங்கையின் நற்பெயருக்குக் களங்கம் ஏற்பட்டுள்ளது. எனவே இதை சாதாரண சம்பவமாகக் கருத முடியாது. சிறைச்சாலையில் ஏற்பட்ட கலவரத்துக்குப் பொறுப்பேற்பதாக நீதியமைச்சர் கூறியுள்ளார். அப்படியானால் அவர் பதவி விலக வேண்டும். இதுவே சர்வதேச சம்பிரதாயமாகும். அவ்வாறு செய்யாமல் பொறுப்பை ஏற்பதாகக் கூறுவது சரியான விடயம் அல்ல. அதேநேரம் இந்தச் சம்பவத்தை நீதியமைச்சர் மீது சுமத்திவிட்டு ஏனையவர்கள் தப்பித்து விட முடியாது. ஒட்டுமொத்த அரசாங்கத்துக்கும் இதில் பெரும் பொறுப்பு உள்ளது - என்றார். (அ-ம)

### அரசியல்...

கறுப்பு ஜுலைக் கலவரத்தின்போது குட்டிமணி உட்பட 35 கைதிகள் கொல்லப்பட்டனர். அதன்பின்னரும் சிலர் கொல்லப்பட்டனர். தமிழர்களுக்கு எதிராக அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விடுவதற்கு அப்போதிருந்த அரசுக்கு தேவைப்பாடு இருந்தது. இதன் ஓர் அங்கமாகவே குட்டிமணி உள்ளிட்டவர்கள் கொல்லப்பட்டனர். அதேவேளை கோத்தாபய ராஜபக்ச, மஹிந்த ராஜபக்ச, ஜே.ஆர். ஆகியோரின் ஆட்சிகாலத்தில் சிறைச்சாலையில் மோதல் ஏற்பட்டு மரணங்கள் இடம்பெற்றன. இந்தச் சம்பவங்களுடன் தற்போதைய சம்பவத்தை ஒப்பிட முடியாது. கடந்த காலங்களில் இடம்பெற்ற சிறைக் கலவரங்களுடன் தற்போதைய சம்பவத்தை ஒப்பிடுவதை நாங்கள் ஏற்க மாட்டோம் - என்றார். (அ-ம-இ)

### ஜி.எஸ்.பி...

நீர்கொழும்பு சிறைச்சாலைச் சம்பவம் தொடர்பில் சுயாதீன விசாரணைக்கு இடமளித்து, பதவியில் இருந்து விலக வேண்டும் என்று அமைச்சர் ஹர்ஷண நாணயக்காரவைக் கோருகின்றோம். இவ்வாறான அரசியற் கலாசாரம் ஏற்பட வேண்டும் என்பதே திசைகாட்டி அரசாங்கத்தின் நிலைப்பாடாக இருந்தது. எனவே, அமைச்சர் தனது பதவியில் இருந்து விலக வேண்டும். அத்துடன், சம்பவத்துக்கு முழுப்பொறுப்பையும் ஏற்று அரசாங்கம் முறையான விசாரணைகளை முன்னெடுத்து குற்றவாளிகளை அடையாளம் காண வேண்டும் - என்றார். (அ-ம)

### பாதையை...

நாள்கள் கடும் கட்டுப்பாடுகளுடனும், பின்னர் எந்தத் தடையும் இன்றியும் வழிபாடுகள் மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டது. எனினும், இராஜேஸ்வரி அம்மன் ஆலயத்துக்கான பாதை விடுவிக்கப்படவில்லை. தனியார் காணிகள் மற்றும் பிறிதொரு ஆலயக் காணி என்பவற்றை ஊடறுத்து அமைக்கப்பட்ட தற்காலிகப் பாதை ஊடாகவே மக்கள் இதுவரை இராஜேஸ்வரி அம்மன் ஆலயத்துக்குச் சென்று வந்தனர்.

இந்த நிலையில் ஆலயத்துக்கான பாதையை விடுவிக்குமாறு மக்களால் பல்வேறு சந்தர்ப்பங்களில் பல்வேறு தரப்பினரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டது. இது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன் யாழ்ப்பாணம் மாவட்ட கட்டளைத் தளபதியுடன் நேற்றுப் பேச்சுவார்த்தை நடத்தினார். இதன்போதே, பாதையை மக்களின் பயன்பாட்டுக்காக விடுவிப்பதற்கு கட்டளைத் தளபதி இணக்கம் வெளியிட்டுள்ளார். இதன்படி, எதிர்வரும் 10ஆம் திகதி முதல் இரவு 10 மணிவரை இந்தப் பாதை விடுவிக்கப்படவுள்ளது. (அ-ம-26)

### காணி...

மேற்கொள்வதற்கு ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன. இதன்படி 25 ஏக்கர் காணிகளே இவ்வாறாகச் சுவீகரிக்கப்படவுள்ளன. மக்களின் காணிகள் மக்களுக்கு வழங்கப்பட்ட வேண்டும். அவை அபகரிக்கப்படுவதை ஒருநாளும் ஏற்றுக்கொள்ள முடியாது. தற்போதைய அரசாங்கம் மக்களின் காணிகள் மக்களுக்கு வழங்கப்படும் என்று தனது தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டிருந்தது. இவ்வாறான நிலையில் அந்த வாக்குறுதிக்கு முரணாக இடம்பெறும் நடவடிக்கைகளை நாங்கள் ஒருபோதும் ஏற்கமாட்டோம் - என்றார். (அ-ம-66)

### எரிபொருள்...

கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும், புதிய சுற்றறிக்கையின் மூலம் குறித்த கட்டுப்பாடு ரத்துச் செய்யப்பட்டுள்ளதுடன், ஜுலை முதலாம் திகதி முதல் தற்போதைய எரிபொருள் விலையின் அடிப்படையில் எரிபொருள் விநியோகம் மேற்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான புதிய சுற்றறிக்கை நிதியமைச்சின் செயலாளர், அனைத்து அமைச்சுகளின் செயலாளர்கள், மாகாண பிரதம செயலாளர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்கள், அரச அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (அ-ம)

### காங்கேசன்...

துள்ளது. யாழ்தேவி மற்றும் உத்தர தேவி உள்ளிட்ட காங்கேசன்துறை வழித்தடப் புகையிரதச் சேவைகளே இவ்வாறு மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. நீண்டகாலமாகப் பயன்படுத்தப்பட்டு வரும் பல ரயில் பெட்டிகள் ஒரே நேரத்தில் கடுமையான தொழில்நுட்பக் கோளாறுகளுக்கு உள்ளாகியுள்ளதோடு. அவற்றுக்கான உதிரிப்பாகங்களுக்கும் பற்றாக்குறை நிலவுகின்றது. இதையடுத்தே, பராமரிப்புப் பணிகளில் தாமதம் ஏற்பட்டுள்ளது. (அ-ச-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அரச அதிபர் வெற்றிக்கிண்ணை வெற்றியாளர்கள் கௌரவிப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை 8

உடுவில் பிரதேச செயலக நலன்புரிச்சங்கத்தின் ஏற்பாட்டில், 2026ஆம் ஆண்டுக்கான அரச அதிபர் வெற்றிக்கிண்ணப் போட்டியில் வெற்றியீட்டிய வீர, வீராங்கனைகளைக் கௌரவிக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் பிரதேச செயலகத்தில் நடைபெற்றது. நலன்புரிச்சங்கத் தலைவர் சு.சிவ்ராமன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதேச செயலர், உதவிப் பிரதேச செயலர், பிரதித் திட்டமிடல் பணிப்பாளர், கணக்காளர், நிர்வாக உத்தியோகத்தர், நிர்வாக கிராம அலுவலர், சமுர்த்தி தலைமையக முகாமையாளர், சமுர்த்தி வங்கி முகாமையாளர்கள் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

2026ஆம் ஆண்டுக்கான அரச அதிபர் வெற்றிக் கிண்ணப் போட்டியில் உடுவில் பிரதேச செயலகம் தாச்சிப் போட்டி (பெண்கள்) - முதலாம் இடம், கயிறு இழுத்தல் (பெண்கள்) - முதலாம் இடம், கயிறு இழுத்தல் (ஆண்கள்) - இரண்டாம் இடம், வலைப்பந்தாட்டம் (பெண்கள்) - இரண்டாம் இடம் என்ற பெறுபேறுகளின் மூலம் சம்பியனைப் பெற்றுக் கொண்டமைகுறிப்பிடத்தக்கது. (க)

**வேலையாட்கள் தேவை**

யாழ் நகரில் உள்ள உணவகத்திற்கு உணவு தயாரிப்பாளர் (Chef), தேநீர் தயாரிப்பாளர், பீட்சா தயாரிப்பாளர் உடன் தேவை.

தொடர்பு: 075 4559 684

(CS 32109) A

**சாரதி தேவை**

விற்பனை விநியோக நிறுவனம் ஒன்றிற்கு சிறியரக சாரதி மற்றும் கனரக வாகன சாரதிகள் தேவை. மானிப்பாய், கொக்குவில் பகுதிகளுக்கு அருகாமையில் இருப்பது சிறந்தது. விற்பனை விநியோக நிறுவனங்களில் வேலை செய்த முன் அனுபவம் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு:-
077 583 3045, 077 078 3289


(CS/61828) J-1

**வேலையாட்கள் தேவை**

சுன்னாத்தில் அமைந்துள்ள புடைவையகத்திற்கு வேலை தெரிந்த, பழக விரும்பும் பெண் வேலையாள் தேவை.
(சுன்னாகத்தை அண்மித்தவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்)
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

விபரங்களுக்கு: 076 63 23 554

# மரண அறிவித்தல்



## முருகேசு விநாயகமூர்த்தி

**தோற்றம்** 07.09.1947 — **மறைவு** 05.07.2026

மல்லாகத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு விநாயகமூர்த்தி அவர்கள் கடந்த 05.07.2026 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு - மாரிமுத்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தியாகராசா சரஸ்வதி தம்பதியரின் மருமகனும், சுஜேதாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான பூபதி, சுப்பிரமணியம், கந்தசாமி, பகவதி மற்றும் இராமுப்பிள்ளை, சேதுபதி ஆகியோரின் அன்புச் சகோதரனும், சியாமளா, ஸ்ரீலதா, முரளிதரன், சசிதரன், சசிலேகா ஆகியோரின் மைத்துனரும், கவிதா, கணாதீபன், கஜானா ஆகியோரின் அன்புத் தந்தையாரும், ரமேஸ், ஜீவரஜனி, ஆதவன் ஆகியோரின் மாமனாரும், சகானா, விகாஸ், அவிக்னன், ஆர்னா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நளை (09.07.2026) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

நீலியம்பனை,
மல்லாகம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 32110) A



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 08.07.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.